Registered at the G. P. O. as a Newspaper  வாரப் பதிப்பு  விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

போன்: 389  தபாற் பெட்டி எண்: 48

மலர் 6  யாழ்ப்பாணம்  குரோதி வைகாசி 18ஆம் நாள்  முஹர்ரம் பிறை 18  (31-5-64)  ஞாயிறுக்கிழமை  இதழ் 112

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

# தமிழ்பேசும் இளைஞரை ஓரணியில் திரட்ட முடிவு

## தொண்டர்களுக்கு பயிற்சி வகுப்புகளும் அளிக்கப்படும்

### தமிழரசு வாலிபமுன்னணிசெயற்குழு தீர்மானம்

நல்லூர், ஞாயிறு

தமிழ்பேசும் இளைஞர்களை ஓரணியின்கீழ்த் திரட்டி அவர்களுக்கு பயிற்சி அளிப்பதுபற்றி இவ்வார முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழரசு வாலிபமுன்னணிச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன், வட்டுக்கோட்டை எம். பி. அ. அமிர்தலிங்கம் ஆகிய இரு எம். பி. க்களும் வாலிப முன்னணிச் செயற்குழுக் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தனர்.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள தமிழ் இளைஞர்களை ஒன்றுபடுத்தி அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியம்பற்றி செயற்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டது.

பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களுக்கிடையில்தமிழ் இளைஞர்கள் இன்று சிக்கித் தத்தளிப்பதனல் அவர்களுக்கு வழிகாட்டக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் செயற்குழு தீர்மானித்துள்ளதுடன் ஒவ்வொரு கிராமங்களிலும் வாலிப முன்னணிக் கிளைகளை அங்குரார்ப்பணம் செய்வதற்கான முஸ்தீபுகளையும் மேற்கொள்வதென முடிவு செய்துள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் தமிழரசு வாலிப முன்னணிக்கிளைகள் அமைக்கப்படும் அதே நேரத்தில் வாலிபமுன்னணியிற் சேரும் தொண்டர்களுக்கு பயிற்சி வகுப்புகளை

(10-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் மாநகரசபை

## வட்டார விஸ்தரிப்பு

### பொது மக்களின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது

நல்லூர், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு சம்பந்தமாக பொதுமக்களின் ஆலோசனைகளை மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு விசாரணைச்சபை கேட்டுள்ளது.

உள்நாட்டு அமைச்சர் திரு. ஏ. பி. ஜெயசூரியா யாழ்ப்பாண மாநகரப்பிரதேச வட்டாரங்களின் எல்லைகளை நிர்ணயிப்பதற்காக அதிகாரசபை ஒன்றினைநிறுவியுள்ளார். இந்த விசாரணைச் சபைக்கு இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. மார்டின்ஸ் தலைவராகவும், வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. மாணிக்கவாசகர் வெளியிட்டுள்ள அறிவித்தலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகரத்துடன் அதனை அண்டிய பிரதேசம் அல்லது பிரதேசங்கள் எதனையாவது இணைக்க வேண்டுமா. யாழ்ப்பாண மாநகரத்துக்கு எவை எல்லைகளாயிருத்தல் வேண்டும், சனத்தொகை, இடப்பரப்பு முதலியவைகளை ஆதாரமாகக்கொண்டு யாழ்ப்பாண மாநகரம் எத்தனை வட்டாரங்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டும், மேற்படி வட்டாரங்கள் எந்த எந்த எல்லைகளைக்கொண்டு வகுக்கப்பட வேண்டும் என்பன போன்ற விசாரணை அம்சங்கள் அடங்கும் விஷயங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் பற்றிய ஆலோசனைகள் சம்பந்தமாகவும் உள்ளூர் அதிகாரஸ்தாபனங்கள், சங்கங்கள், சபைகள் வரியிறுப்பாளர், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

யோசனைகள்யாவும், எழுத்தில் ஒவ்வொரு விஷயம் பற்றியும் கூறப்படும் ஆலோசனைகள் தனித்தனி தலைப்புகளின் கீழ் எழுதப்படவேண்டும். யாழ்.மாநகரபிரதேச வட்டார எல்லைநிர்ணயஅதிகாரசபைக்கு ஆலோசனைகள் தெரிவிப்போர் ஜூன் மாதம் 8-ம் திகதிக்கு முன்னர் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிய ஜோதியின் அஸ்தி ஜூன் 7ல் கரைக்கப்படும்

### "ஜவகரைப்போல் மனிதராய் பிறப்பது அரிதிலும் அரிது"

புதுடில்லி, மே 30

மறைந்த ஜவஹர்லால் நேருவின் அஸ்தி இன்று காலை சேகரிக்கப்பட்டது. ராஜ்காட்டில் இன்று காலை நடைபெற்ற அஸ்தி சேகரிப்புச் சடங்குகளைக் காணும் பொருட்டு இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. குல்சாரிலால் நந்தா, திருமதி இந்திரா காந்தி, திரு. லால் பகதூர் சாஸ்திரி, திரு. காமராஜர், திரு. ஷேக் அப்துல்லா, திரு. ஸகீர் ஹுசெய்ன் உட்பட பல தலைவர்கள் ராஜ்காட்டுக்குச் சென்றிருந்தனர்.

திருமதி இந்திரா காந்தியின் மூத்த புதல்வனும் மறைந்த தலைவரின் மூத்த பேரருமான ராஜி இன்று அதிகாலை தான் இங்கிலாந்திலிருந்து புதுடில்லிக்கு வந்திருந்தார். ராஜிதான், நேருஜியின் அஸ்தி சேகரிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டார்.

அஸ்தி, இப்பொழுது நேருஜியின் இல்லத்திலுள்ள பூங்காவில் வைக்கப்பட்டுள்ளது. காலை முதல் மாலை வரை பொதுமக்கள் இதற்கு அஞ்சலி செலுத்தலாம். அடுத்த மாதம் 7-ம் திகதி நேருஜியின் அஸ்தி அலகபாத்தில் கரைக்கப்படும். பல புண்ணிய இடங்களுக்கும் அஸ்தி கொண்டு செல்லப்படும்.

இன்று காலை ராஜ்காட்டில் நடைபெற்ற சடங்கின்போது இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவிக்கையில், ஜவஹர்லால் நேருவைப் போன்று மனிதராய்ப் பிறப்பது அரிதிலும் அரிது என்று கூறினர்.

இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்தும் பொருட்டு ராஜ்காட்டுக்குச் சென்றிருந்தனர்.

## படத்தயாரிப்பாளர் திடீர் மரணம்

### நேரு மரணத்தின் எதிரொலி

புதுடில்லி, மே 30

"மதர் இந்தியா", 'ஆன்' முதலிய பிரபல படங்களைத் தயாரித்த படத்தயாரிப்பாளரும், டைரக்டருமான திரு. மெஹ்பூர்க்கான், நேருஜியின் மரணம் குறித்து அதிர்ச்சியுற்று காலமானர்!

நேருஜியின் மரணச்செய்தி கிடைத்ததும் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. நானவதி ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்ட சிலமணி நேரத்துக்குள்ளாக அவர் மரணமானர்.

திருச்சியில் நேருஜியின் மரணம் குறித்து நூற்றுக்கதிகமானவர்கள் மூர்ச்சையுற்று விழுந்தனர்.

## 'நேரு இல்லாத இந்தியாவை இனி நினைத்து பார்க்கமுடியாது

### நேருவே இந்தியா; இந்தியாவே நேரு'

### இலங்கைப் பிரதமர் புகழ்மாலை

புதுடில்லி, மே. 30

"நேருவே இந்தியா; இந்தியாவே நேரு" என்று இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை புதுடில்லி ராம் லீலா மைதானத்தில் மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு ஒரு பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வெளிநாட்டுத் தலைவர்கள் உட்பட பலர் சொற்பொழிவாற்றினர். இக் கூட்டத்துக்கு சுமார் நான்கு லட்சம் மக்கள் வந்திருந்தனர்.

இக் கூட்டத்தில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தொடர்ந்து பேசுகையில்; நேருஜி இல்லாத இந்தியாவை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை என்று குறிப்பிட்டார்.

"இந்தியா பல தலைவர்களையும் நிபுணர்களையும் உற்பத்தி செய்திருக்கிறது. ஆனல் மறைந்த நேருவைப்போல் எங்கள் உள்ளம் கவர்ந்தவரை இனி காணமுடியாது. அவருக்கு நாம் ஒரு ஞாபகார்த்த சின்னத்தை அமைக்க வேண்டுமென்றல் சகிப்புத் தன்மை பொருந்திய ஒரு உலகத்தை சிருஷ்டிக்கவேண்டும்" என்றும் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினர்.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் சைவசித்தாந்தச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடரில் இரண்டாவது சொற்பொழிவை இன்று திரு. சு. நடேசபிள்ளை நிகழ்த்துவார்.

## 21 கோரிக்கைகளை ஆதரித்து பொதுக் கூட்டம்

### தியாகி கந்தசாமி நினைவு தினத்தில் தொழிற் சங்கங்கள் கொண்டாடும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தியாகி கந்தசாமி தினத்தை கொண்டாடுமுகமாக ஜூன் மாதம் 5-ந் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில மாபெரும் கூட்டம் ஒன்றுநடைபெறவிருக்கிறது. 21கோரிக்கைகள் பெறுவது சம்பந்தமாக ஆலோசிப்பதே முக்கிய அம்சமாக இருக்கும் இக்கூட்டத்தில் இலங்கையின் பிரபல தொழிற் சங்கவாதிகள் சொற்பொழிவாற்றுவார்கள்.

இது சம்பந்தமாக பொது சேவை தொழிற்சங்க சம்மேளன யாழ்ப்பாணக் கிளைத் தலைவரும் தபால் தந்திச் சங்க யாழ்கிளைத் தலைவரும், யாழ்ப்பாணமாவட்ட தொழிற்

(10-ம் பக்கம் பார்க்க)

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி?

"அத்திரி" எழுதுகிறார்

[31-5-1964 தொடக்கம் 6-6-1964 வரை]

### மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு இந்த வாரத்தில் செலவுகள் அதிகரித்தாலும் பணவருவாய்க்கு இடமுண்டு. உங்கள் உறவினர் ஒருவர் இந்த வாரத்தில் மறையக்கூடும். இதனால் உங்களுக்கு பெருநஷ்டமும் மனவேதனையும் ஏற்படும். எந்தவிதமான பொறுப்பும் இந்த வாரத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடாது. வியாழக்கிழமை உங்களுக்கு அநுகூலமானநாள். எந்தக்காரியத்திலும் தாமதமான போக்கு ஏற்படும். சனிக்கிழமை அவ்வளவு அநுகூலமான நாளல்ல

### இடபம்

(கார்த்திகை 2,3,4-ம் பாதம்களிலும் ரோகிணி,மிருகசீரிடம் பூசம் 1,2,3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்று நடைபெருமல் தடைப்பட்டுப்போகும். பணவிஷயமான சில தகராறுகள் உங்களுக்கு வேதனையைத்தரும். பண்பு குறைந்த முறையில் சில உறவினர்கள் நடந்து கொள்ளுவதின் மூலம் உங்கள் காரியங்கள் தடைப்பட்டு பின் தாமதத்தில் கைகூடும். நீங்கள் ஆசைப்பட்டபடி நடந்து கொள்ளமுடியாமல் சூழ்நிலைகள் கெடுத்துவிடும். மனச்சோர்வடையாமல் முன்னேற்றத்திற்குரிய பாதையில் செல்வீர்களானல் பின்னுக்கு நன்மையடைவீர்கள்.

### மிதுனம்

(மிருகசீரிடம்3, 4ம்பாதங்களிலும், திருவாதிரை, புனர்பூசம் 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு இந்த வாரம் பொருளாதார விஷயத்தில் நன்மையாக இருக்கும். முன் கைவிட்டுப் போன பொருள்கள் சில இந்த வார இறுதிக்குள் உங்கள் கைக்கு வந்து சேரும். நண்பர் ஒருவரின் கொடுக்கல் வாங்கல் பிணக்குக்கு நீங்கள் பிணை நிற்கவேண்டியிருக்கும். யந்திரங்கள் மூலம் தொழில் நடத்தும் இந்த இராசிக்காரர்களுக்கு அலைகளினல் இடை இடையே தொல்லைகள் ஏற்படும். பொறுத்த நேரத்தில் அவை இயங்காமல் தொழில் மந்தம் ஏற்படும்.

### கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரத்தில் உங்களுக்கு பொருள்முடை அதிகமாயிருக்கும். கையிலிருக்கும் பணத்தைக்கூட கைவிட்டு விட்டு தவிப்பீர்கள். உங்கள் கையில் வரும் பணத்தை இறுக்கிப்பிடித்தீர்களானல் சுகமடைவீர்கள். மன நிம்மதியை நாடி ஒதுங்கி நடக்கத் தெண்டித்தாலும் மற்றவர்கள் உங்களை நச்சரித்துக்கொண்டேயிருப்பார்கள். குடும்பத்திற்குள் அனுவசியமான சச்சரவுகள் கிளம்பிக்கொண்டேயிருக்கும். அற்பவிஷயங்களுக்கும்கணவன் மனைவிக்கிடையே பெரும் பூசல்கிளம்பிவிடும். பொறுமையைக்கடைப்பிடிப்பது நல்லது.

### சிங்கம்

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்கள் பொறுமையை மற்றவர்கள் சோதிப்பார்கள். மிகவும் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிப்பீர்களானல் பலவிதமான நன்மையைப் பெறுவீர்கள். எந்த விஷயத்தையும் சாமர்த்தியமாகவும் சாகசமாகவும் தருணத்துக்குத் தகுந்தமாதிரிச் செய்யவும். அதனுல் சுகமுண்டு. நீங்கள் எதிர்பார்த்தபடி மற்றவர்கள் நடக்கமாட்டார்கள். விட்டுக்கொடுத்து நடப்பதின் மூலம் எந்தக்காரியத்தையும் சுலபமாகச் சாதிக்கலாம்.

### கன்னி

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு வைத்தியச்செலவுகள் இந்த வாரத்தில் அதிகரிக்கும். உங்கள் இருதயத்தில் பலவீனம் ஏற்பட்டு அதனல் களைப்பு ஏற்படும். மனஉற்சாகம் குறைந்து மிகவும் சோர்வாக காணப்படுவீர்கள். வாய்வுசம்டந்தமான கோளாறு உள்ள இந்த இராசிக்காரர்கள் இந்த வாரத்தில் மிகவும் அவஸ்தைப்படுவார்கள். குழந்தைகள் உங்களுக்கு மிகவும் தொல்லையைத் தருவார்கள். செவ்வாய்க்கிழமை உங்களுக்கு அனுகூலமானநாள்.

### துலாம்

(சித்திரை 3, 4-ம் பாதங்களிலும், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் நண்பர் வழியால் உங்களுக்கு பல நன்மையான காரியங்கள் இந்த வாரத்தில் நடைபெறும். முன் உங்களுடன் மனவேற்றுமைப் பட்டிருந்த நண்பர் ஒருவர் இந்த வாரத்தில் உங்கள் உறவை நாடி வருவார் பெருந்தன்மையுடன் பழைய வேற்றுமைகளை மறந்து அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். வாகனத்தின் மூலம் தொழில் நடத்தும் இந்த இராசிக்காரர்களுக்கு இந்தவாரம் அவ்வளவு அனுகூலமான பலன்கள் நடைபெருது.

### விருச்சிகம்

(விசாகம் 4-ம் பாதத்திலும், அனுஷம், கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய மனோபாவத்தைப் புரிந்து கொள்ளாமல் சிலர் உங்களை துன்புறுத்துவார்கள். இதை நீங்கள் பொருட்படுத்தத் தேவையில்லை. பணஆசை பிடித்த உறவினர்கள் உங்களைத் தப்பான பாதைக்கு இழுத்துச் செல்ல முயற்சிப்பார்கள். மிகவும் நிதானமாக நடந்துகொண்டால் மற்றவர்களுடைய தலையீடு உங்களை ஒன்றும் செய்யாது. மனத்துணிவுடன் நீங்கள் விரும்பியபடி நிதானத்துடன் நடந்துகொள்ளுங்கள்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்த வார ஆரம்பத்தில் ஏற்படும் சில தொல்லைகள் பின்னுக்கு மறைந்துவிடும். வார ஆரம்பத்தில் வீண்சச்சரவுக்கு உங்களை இழுப்பார்கள். எதற்கும் மௌனமாகக்காலம் கடத்தவும். எந்தவிதமான சூழ்நிலையிலும் ஆத்திர மடையாமலிருந்தீர்களானல் எந்தவித நிலையையும் சமாளிப்பீர்கள். எதிரிகளினல் தூண்டிவிடப்பட்ட அன்னியர்களின் தொல்லைகள் இந்த வாரத்தில் அதிகரிக்கும்.

### மகரம்

(உத்திராடம் 2, 3, 4-ம் பாதங்களிலும், திருவோணம், அவிட்டம் 1,2-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் குடும்பத்தாரின் தேகசுகம் இந்த வாரத்தில் பாதிக்கப்படும். பொதுவாக குழந்தைகளின் சுகம் பாதிக்கப்பட்டாலும் உங்கள் களத்திரத்தின் சுகத்தைக் குறிப்பாக கவனிக்க வேண்டும். மாமன்வழி உறவினர் ஒருவருக்கு உங்கள் உதவி அவசியம் தேவைப்படும். பொது விஷயங்களில் உங்களுடைய ஆதரவை நாடி வருவார்கள். தர்மவிஷயங்களுக்காக நீங்கள் இந்தவாரம் அதிகம் செலவழிக்க நேரிடும்.

### கும்பம்

(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும்,சதயம்,பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) முற்கோபமுள்ள இந்த இராசிக்காரர்கள் அதிகமாக பொதுவிஷயங்களில் பங்கெடுத்துக் கொள்ளாமலிருப்பது நன்மை. உங்கள் பணநிலைமையை அறியாத சிலர் உங்களை நச்சரிப்பார்கள். ஏழ்மைநிலையடைந்த உறவினர் ஒருவர் உங்களிடம் உதவி தேடிவருவார். அவருக்கு வேண்டிய உதவியைச்செய்வதன் மூலம் பெரும்புண்ணியத்தைச் சம்பாதிப்பீர்கள். உங்கள் செல்வாக்கும் அந்தஸ்தும் அதனல் உயரும். வியாழக்கிழமை உங்களுக்கு மிகவும் அநுகூலமான நாள்,

### மீனம்

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும், உத்தரட்டாதி ரேவதியிலும் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரம் ஏற்படப்போகும் சில செலவினங்கள் உங்களுக்கு பின்னுக்கு நன்மை செய்யக் கூடியதாக அமையும். சகோதர வழியால் சில நன்மைகளை இந்த வாரத்தில் எதிர்பார்க்கலாம். பழைய அனுபவங்கள் சில இந்த வாரத்தில் உங்களுக்கு மிகவும்உதவியாக இருக்கும். உங்களை கட்டுப்படுத்தி நடக்க மற்றவர்கள் முயன்ருல் அதற்கு இடம் கொடுக்காமல் நடந்து கொள்ளவும். சாப்பாட்டு விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கவும்.

## வித்துவ சிரோமணி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களைக் கேட்டவர்களைக் கண்டவர்கள் தாமும் இக்காலத்துச் சாதாரண இரசனைகளையுங்கவிதைகளையுஞ் சகிக்க மாட்டார்கள்.

இலக்கியங்களிலே உயிரான இரசனைக்கு உரிய பொருள் எது என்று தெரிதல் வேண்டும்.

தெரிந்ததன் மேல் இரசனையை எடுத்துக்காட்டுதற்கு ஏற்ற பாஷை நடை கைவரல் வேண்டும்.

இந்த இரண்டுமாயிருந்தவர் பொன்னம்பலபிள்ளை.

பொன்னம்பலபிள்ளையின் சங்கநூற்பயிற்சி பற்றித் திருக்கோணமலைக் கனகசுந்தரம்பிள்ளை நற்றிணை உரை முகவுரையில் எழுதியிருக்கின்றார். நற்றிணை உரையாசிரியருக்கு அதில் உண்டான சந்தேகங்களைப் பொன்னம்பலபிள்ளை தீர்த்து வைத்தார் என்று, அதில் வருகிறது.

"பொன்னம் பலப்பெயர்ப்
புட்கலா வர்த்தம்
புராதன நியாயோததி
புகழ்சங்க லக்கியப்
புணரிரா மாயணப்
பொருவறு மளக்கர்புவியிற்
றுன்னித் துலங்கிமலி
சூதனெளி மாலையாந்
தொல்பயோ ததிகாவியத்
துங்கவார் கரிபார
தப்பரவை லக்கணத்
தொடுகடல்க டுய்த்தெ
முந்தே
மின்னித் திடுக்கிட
விடித்தியாழ்ப் பாணகிரி
மீதேறி நல்லைமுடிமேன்
மேவிப் படிந்து செந்
தமிழ்மேதை நிதிமாரி
மிகவும் பொழிந்திட்டதிச்
சன்மத்து வித்தியார்த்
திப்பயிர் தழைத்திடச்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே
யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே."

இச்செய்யுள் ஈழமண்டல சதகத்திலுள்ளது. இதனை இயற்றியவர்கள் பொன்னம்பலபிள்ளையின் தலைசிறந்த மாணவரும், நயம்பட உரைவிரிக்குந் திறத்திற் பொன்னம்பலபிள்ளையைப் பெரிதும் பின்பற்றியவர்களும், திருவாதவூரடிகள் புராணத்திற்குச் சிறந்ததொரு விருத்தியுரை எழுதிப் பொன்னம்பலபிள்ளையின் முன்னிலையில் அரங்கேற்றிப் பொன்னம்பலபிள்ளையால் உரையாசிரியர் என்ற பட்டம் சூட்டப் பெற்றவர்களுமான ம. க. வேற்பிள்ளைப் புலவர் அவர்கள்.

(அடுத்த இதழில் முற்றும்)

## நோபுரா (நடனம்)

சென்ற கிழமை சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற "நோபுரா" நடனத்தை பார்த்தவர்கள் யாரும் இந்தத்துறையில் முயற்சி எடுத்தவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. ராஜ் கலா மந்திர் தான் இந்த நடனத்தை தயாரித்தாரகளென்ருலும் — பிரசித்தி பெற்ற பத்திரிகைப் படப்பிடிப்பாளர் திரு. கே. ராஜப்பன் இம்முயற்சியில் பெரிதும் ஈடுபட்டார் என்பது குறிப்பிடுதற்குரியது, இதுவரை எவரும் எடுத்திராத ஒரு முயற்சியில் திரு. ராஜப்பன் வெற்றிகண்டார் என்றே சொல்லவேண்டும். சிங்கள நடனமான 'ஓமரி லதா' என்ற நடனத்தையும் தமிழ் நாட்டியத்தையும் ஒரே மேடையில் ஏற்றி - இருசமுதாய மக்களையும் ஒன்று சேர்த்துப் பிணைத்தமை போற்றற் பாலது. அன்றுவெளியிடப்பட்ட சிறப்பு இதழின் அட்டைப் படத்தில் ஓர் இந்துக் கோயிலும் — கண்டி தலதா மாளிகையும் இடம் பெற்றிருந்தது.'இந்ததமிழ்சிங்களநடனத்தினல் இரு சமூகத்தினரிடையேயும் ஒரு தேசிய ஒற்றுமையையும் — பரஸ்பர நல்லெண்ணத்தையும் இந்த நாட்டியத் தயாரிப்பாளர்கள் காண்பித்துவிட்டார்கள். இந்த ரீதியிலே இரு பகுதியினருடைய கலாச்சாரத் தொடர்புகளும் ஆவன செய்வதற்குதவும் என்பதில் சந்தேகமில்லை. இதன் மூலமாக நாங்கள் ஒரு சிறந்த ஒற்றுமையுள்ள இலங்கையை, சங்கீதம், நாடகம், இசை, இலக்கியம் மூலமாக ஆக்கிக் கொள்வோம்" என்று கல்வி கலாசார மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லே அன்று விடுத்த செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

—'திரு'

## ஜவாகரெனும் தியாகக்குன்று...

—"யாழ்ப்பாணன்"—

இமயமுதல் குமரிவரை இலங்கு நாட்டில்
இன்புறநம் மக்களெலாம் இனிது வாழ
அயனுனையோர் அவதார புருட ளுக்கி
அன்றுன்னைப் பாரதத்தின் உந்தி சேர்த்துப்
பெயர்பரவ வைத்தனன்நீ பிறந்த நாட்டில்
பெற்றியினை யுன்னுயிரின் துடிப்பாய்க் கொண்டே
அயர்வின்றி யுழைத்திட்டாய் அமர ளுய்
அன்னையவள் பணியிதுகால் போது மென்ருே?

அலைகடலில் கொந்தளிக்கும் ஆழி தன்னில்
அடுத்தடுத்தே எதிர்முடுகும் புயற்காற் ருதி
நிலைதளரச் செயவதனிற் சிக்கி யாழும்
நெடுங்கலமாம் பாரதத்தை நிலையில் வைத்தும்
பலமுயர்ந்த நாடெல்லாம் பரிய வைத்தும்
பகலவனுய் எங்குமுன தொளியே சான்று
உலகதனில் ஒளிர்ந்திடடாய் உம்பர் நாடு
ஒளிர்ந்திடவோ சென்றிட்டாய் ஒளியே யற்ருேம்.

உலகினுக்கோர் திலகமென ஒளிர்ந்து நின்ருய்
உன்பெயரை எங்கெவரும் ஒலிக்க வைத்தாய்
மலையெனவே திடமுள்ள வைரத் தோடு
மாற்றலரின் வச்சனயை வலியின் ருக்கி
நலமுயர்ந்த பாரதத்தின் நன்மை யொன்றே
நனவினிலும் கனவினிலும் நாளும் கொண்டு
விலையுயர்ந்த மாணிக்கம் நீயின் ருகி
விண்ணுலக மெய்தினையுன் விளக்கம் காலும்.

உன்வாழ்வு உன்பெருமை உன்தியாகம்
உன்பண்பு உன்னுறுதி உலக மேத்த
நண்பலரும் நாணியொரு செயலே யற்று
நமோவென்றே நாளுமுனைத் துதிக்க வைத்தாய்
இன்னுவும் இன்முகமும் எழிலு மின்ருேர்
எரியினுக்கிங் கிலக்காகி ஏனே தீயும்?
பொன்னுன உன்முகத்தைப் பொலிவை யாமும்
புவியிலுள மக்களும்இங் கென்ருே காணும்?

ஒரொருவன் உலகிலுயாக் கொளுத்த னென்ருல்
உன்பெயர்தான் உலகிலெலா நாவும் செப்பும்
பாரிலுள மன்னவரும் பணிவே கொள்ளப்
பாரதத்தின் முடிசூடா மன்ன னுகிச்
சீருயர்ந்து நின்றிட்டாய் தெய்வ மானுய்
திருமகனே ஜவாகரெனும் தியாகக்குன்றே
காரிருளில் கண்ணளித்த கடவுள் நீயே
கனகமணிக் குன்றெனவுன் நாமம் வாழி!

அழகிய பெனியன்
கால்மேஸ் !!
"லீடன்"
தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில்
உற்பத்தியாகின்றன

LEYDEN

பல நிறுசுகள்! பல அளவுகள்!! எங்கும்கிடைக்கும்
இன்றைய தேவை: சுதேசிப்பொருள் ஆதரவு
அதற்கு வழி 'லீடன்' பெனியன்கள்
கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனுட்டு
பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
'லீடன்' பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை 7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —

[சென்ற ஞாயிற்றுக்கிழமை வெளியான "இலக்கிய வழி" திருத்தப் பதிப்பில் இருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டது. இலக்கியவழி திருத்தப்பதிப்பு ஜி. ஸி. ஈ. உயர்தர பரீட்சைக்கு (1965—1966) பாடபுத்தகமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பது நேயர்கள் அறிந்ததே.]

பொன்னம்பலபிள்ளை நாவலர் அவர்களுக்கு மருமகரும் மாணவருமாவர்.

கந்தபுராணத்திலே திருமணப் படலங்களும் மற்றைய விசேட பகுதிகளும் பொன்னம்பல பிள்ளைக்குப் பாடஞ் சொல்லி வைக்கப்பட்டன. திருச்சிற்றம்பலக் கோவையார் உரை, திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூல் விருத்தியுரை ஆகிய மூன்று நூல்களையும் வசனம் வசனமாக நாவலர் அவர்களிடம் படித்தவர் பொன்னம்பலபிள்ளை. அவருடைய குருசிஷ்யப் படிப்பு அவ்வளவே. அப்பொழுது பிரசித்திபெற்று விளங்கிய கோப்பாய்ச் சபாபதி நாவலர், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, மகாவித்துவசிரோமணியாய் விளங்கிய பிரமஸ்ரீ சி. கணேசையர் என்பவர்களை உள்ளிட்டவர்கள் — யாழ்ப்பாணத்திற் படித்தவர்கள் என்றிருந்தவர்கள் எவர்களோ அவர்கள் — அனைவரும் பொன்னம்பலபிள்ளையிடம் பாடம் கேட்டவர்கள்.

தென்னிந்தியாவில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களை நடமாடும் வாசிகசாலை என்பார்கள். அவ்வாறே இங்கே பொன்னம்பலபிள்ளை நடமாடுஞ் சர்வகலாசாலையாய் விளங்கினார். தெருக்கள், தெருத் திண்ணைகள், குளக்கட்டுக்கள், மரநிழல்கள் பொன்னம்பலபிள்ளை பாடஞ்சொல்லும் இடங்கள். பொன்னம்பலபிள்ளை அழகுகள், நவஇரசங்கள் சொட்டச் சொட்டப் பாட்டுக்களுக்கு உரை விரித்தற்கென்றே பிறந்தவர் என்று சொல்லுவார்கள். அவரை மாணவர்களாகிய மதுகரங்கள் எப்பொழுதும் சூழ்ந்து கொண்டேயிருப்பார்கள். உச்சியிலிருந்து உள்ளங்கால் பரியந்தம் உள்ளங் காலிலிருந்து உச்சி பரியந்தம் பொன்னம்பலபிள்ளையின் உருவம் இலக்கிய இரசனையால் ஆனது. தனிக் கற்கண்டிற்செய்த மோதகம்போல இலக்கிய இரசனைமயமாயிருந்தார் பொன்னம்பலபிள்ளை. புதிது புதிதாகத் தமக்குத் தோன்றுகின்ற இலக்கிய இரசனையை யாருக்காவது வெளிப்படுத்தாமல் இருக்கமாட்டாமை பொன்னம்பலபிள்ளையின் நித்திய கலியாணகுணம். பொன்னம்பலபிள்ளை இந்த மாட்டாமையாகிய இரசகுணத்தை ஒருவாறு தணித்து முட்டுத் தீர்வதற்கு உபகாரஸ்தலங்களாய்ப் புராண படனம் நடைபெறுகின்ற முக்கிய சைவாலயங்கள் அமைந்திருந்தன.

யாழ்ப்பாணத்திற் பிரசித்திபெற்று விளங்குகின்ற வண்ணை வைத்தியேசுவரன் கோயிலின் வித்தியாமண்டபம் ஒருகாலத்தில் நாவலர் அவர்களின் சைவப்பிரசங்கங்கள் பிரவாகிக்கும் இடமாயிருந்தது. அதனைத் தொடர்ந்து அம்மண்டபம் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை நவரசங்களுங் குதிகொண்டாடப் புராணங்களுக்கு உரைவிரிக்கும் இடமாய் மாறி ஒரு சர்வகலாசாலை ஆயிற்று.

பொன்னம்பலபிள்ளை வியாக்கியானஞ் செய்யும்போது ஒருபுறத்தே மாணவர்களும் வித்துவான்களும் ஏடும் எழுத்தாணியுமா யிருப்பார்கள். மற்றொரு புறத்திற் பெண்களும் ஏனைய இடங்களில் ஆண்களும் எள்ளிட இடமின்றி இருப்பார்கள்; குண்டூசி விழுந்தாற் கேட்கும். வாசிக்கிறவர் எக்கதியில் எந்த இராகத்துக்குப் பாடலை வாசிப்பாரோ அக்கதியில் அந்த இராகத்துக்குப் பொன்னம்பலபிள்ளை உரைவிரிப்பார். விசேடவியாக்கியானங்கள் அலை அலையாய் எழுந்து புரண்டுகொண்டிருக்கும். பொன்னம்பலபிள்ளைக்கு வாசிக்கிறவர்கள் விசேட ஆயத்தஞ் செய்துகொண்டுவருவார்கள். எந்த இடம் எந்த இராகத்துக்கு வாசிக்கவேண்டுமோ அந்த இடம் அந்த இராகத்துக்கேவாசிக்கப்படும் அன்றி, காலந்தாழ்த்தியும் இராகம் மாறுதலடையும். பொன்னம்பலபிள்ளைக்கு வாசிக்கிறவர்களுக்குப் பிரத்தியேகமான மரியாதை உண்டு.

பொன்னம்பலபிள்ளைக்கு உள்ளக்கிளர்ச்சி எவ்வளவு அமையுமோ அவ்வளவுக்கு அவர் விரிக்கும் உரைக் கருத்துக்களும் புதியன புதியனவாய் ஊற்றெடுத்துப் பிரவாகிக்கும்.

"பூசனை புரிந்த பின்னர்ப்
புவனமின் ருள் தன்கையைப்
பாசம தகன்ற தொல்சீர்ப்
பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமோ டளித்தேன் என்று
நெடுமறை மனுக்கள் கூறி
வாசகமுதுமலர் நுழைய முய்த்தனன்
மருகனென் றவனையுன்னி"

என்ற திருவிருத்தம் கந்தபுராணத்திற் சுவாமி திருக்கல்யாணப்படலத்தில் வருகின்றது. இமயமலை அரசன் தன் தவப்புதல்வியாகிய உமாதேவியாரின் திருக்கரத்தை பரஞ்சுடராகிய பரமசிவத்தின் திருக்கரத்துள் வைத்துத் தாரைவார்த்துத் தத்தஞ் செய்கின்றான். பாட்டிறுதியில் 'மருகனென்றவனையுன்னி' என்று ஒருதொடர் வருகின்றது. அவனை—அந்தப் பரஞ்சுடராகிய பரமசிவத்தை, மருகன் என்று உன்னி—தனக்கு வந்துவாய்த்த மருமகன் என்று நினைத்து மகிழ்ந்து தத்தஞ்செய்தான் என்று உரை விரிப்பது வழக்கம்.

ஆனால், ஒருநாள் பொன்னம்பலபிள்ளை அப்பாட்டிற்கு உரை சொல்லும்போது நிலை யாப்பிரகாரம் அந்தத் தொடருக்கு வேறொரு பிரகாரம் பொருள்விரித்து வியாக்கியானஞ் செய்தார்.

அந்தப் பரமசிவத்தை, மருகனென்றவனை—ஒரு காலத்திலே தனது அறியாமையாலே தனக்கு மருகனானே என்று அவமதித்த அந்தத் தக்கனை (அவன் பட்டபாடுகளை), உன்னி—இமயமலை அரசன் அப்பொழுது சிந்தித்து, தான் அவ்வாறு நினையாமல், புதல்வியை உலகமாதா ஆகவும், பரமசிவத்தை முழுமுதற் பரம்பொருளாகவும் கருதித் தத்தஞ் செய்தான் என்பது பொன்னம்பலபிள்ளையின் அன்றைய புதிய வியாக்கியானத்தின் சிறிய சுருக்கம்.

இந்த வியாக்கியானம் ஓர் இரவு நடந்தது. அடுத்தநாட் காலை தொடக்கம் பலவாரம், பலமாதம், பலவருடகாலம் "மருகனென் றவனை யுன்னி" என்ற தொடர் படித்தவர்கள் மத்தியிற் பேசப்பட்டு வந்தது. இன்றைக்குங் கிராமாந்தரங்களிற் சுவாமி கல்யாணப் படிப்புத்தினத்தில் மேற்படி தொடரும், அதனைத் தொடர்ந்து பொன்னம்பலபிள்ளையின் அருமைப்பாடும் எடுத்துப் பேசப்பட்டுவருகின்றன.

"ஆவதத்த சோமாக்கள் வாழ் அரிபுரம்" என்பது மார்க்கண்டேயப் படலத்தில் வருகின்றதொரு தொடர். இத்தொடரில் ஆ என்பதற்குக் 'காமதேனு' என்று பொருள் கூறி, அப்பாலுள்ள சொற்களுக்குக் காமதேனுவோடியைபுப் பொருள் பண்ணிவந்தார்கள். ஒருநாட் பொன்னம்பலபிள்ளை அந்தத் தொடரை, "ஆபத்+அத்தம்" என்று பிரித்து 'ஆபத்துக் காலத்தில் உதவும் சேமநிதி பொருந்தியவர்கள் அரிபுரத்து மனிதர்கள்' என்று வியாக்கியானஞ் செய்தார். தமது என்னுஞ் சொல் தம்ம என்று வருவதுபோல, 'ஆபத்' 'ஆவத்' தெனநின்றது.

இவ்வாறே எத்தனையோ தொடர்களுக்கும் பாட்டுகளுக்கும் விசேட கருத்துக்கள் பொன்னம்பலபிள்ளையின் மாணவபரம்பரையில் உள்ளவர்கள் நூதனம் நூதனமாகச் சொல்லுவார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குப் போகிற வித்துவான்களை மதுரைத் தமிழ்ச் சங்கதாபகரான பாண்டித்துரைத்தேவர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை எப்படியிருந்து எவ்வாறு வியாக்கியானஞ் செய்வார் என்று வினவி வினவி, அவர்கள் சொல்வதைக் கேட்டு கேட்டு வாயூறுவாராம்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணவருள் வன்றொண்டச் செட்டியார் என்பவர் ஒருவர்; மிகப் படித்தவர். இவரைப்பற்றி உ. வே. சாமிநாதையர் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். இந்த வன்றொண்டச் செட்டியாருக்குப்பிற்காலத்திற் கண்பார்வை மங்கிப்போனது. கண்ணின் சக்தி அனைத்தும் செவிக்குப்போய் விட்டது. அவர்செவி, நுண்செவி. "செவிக்குணவு இல்லாத போழ்து" என்ற திருக்குறள் செட்டியாருக்குப் பொருத்தமானது. செவிக்குணவு தேடி ஒருமுறை செட்டியார் யாழ்ப்பாணம் வந்தார். வந்தவர் பொன்னம்பலபிள்ளை புராணத்துக்குப் பொருள் விவரிக்கும் இடத்துக்குப் போய் ஒரு புறத்தில் இருந்தார். வியாக்கியானத் திரை எறிகின்றது. செட்டியாருக்குத்தெவிட்டாது தித்தித்து அமுது ஊறுகின்றது. உடம்பு வெடிக்கிறது போன்ற ஆனந்தம் மேலிடுகின்றது. செட்டியார் இருந்தபடி மெல்ல மெல்ல இடம் பெயரத் தொடங்கிவிட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் எட்டிப் பொன்னம்பலபிள்ளையைக் கட்டித் தழுவிவிட்டார். ஆச்சரியமான ஆற்றுமை அது!

நாவலர் அவர்களுக்குப் பெரியபுராணம் போலப் பொன்னம்பலபிள்ளைக்குக் கம்பராமாயணம் நரம்புத் தசைகளிலும் ஊறிக்கிடந்தது. சீவகசிந்தாமணியிலும் பொன்னம்பலபிள்ளைக்கு விசேட பயிற்சி உண்டு.

சீவகசிந்தாமணியை முதன் முதற் பதிப்பித்தபோது உ. வே. சாமிநாதையர் ஒரு பிரதியைப் பொன்னம்பலபிள்ளைக்கு அனுப்பி ஒரு கடிதமும் எழுதியிருக்கின்றார். அக்கடிதம் இது:

"பாற்கடலின் ஆழம் மந்தரமலைக்குத் தெரியுமேயன்றி வேறு எந்த மலைக்கும் தெரியாது. அது போலச் சீவகசிந்தாமணியின் ஆழம் உங்களுக்குத் தான் தெரியும். ஏதோ ஒருவாறு நான் பதிப்பித்திருக்கிறேன். தாங்கள் அங்கீகரித்துக்கொள்ள வேண்டும்."

(என்சரித்திரம்—உ. வே. சா)

இப்படிச் சாமிநாதையர் எழுதுவாரேயானாற் பொன்னம்பலபிள்ளையின் சிந்தாமணிப் பயிற்சி எப்படியிருக்கும் என்பது சிந்திக்கத்தக்கது.

கம்பராமாயண இரசனையையுஞ் சிந்தாமணி முதலிய காவிய இரசனையையுங் கந்தபுராணத்துக்கு வியாக்கியானஞ் செய்யும்போது ஏற்ற ஏற்ற இடங்களிற் பொன்னம்பலபிள்ளை அள்ளிச் சொரிவார். அது வித்துவான்களாகிய மதுகரங்களுக்குப் புத்தம் புதிய அமிர்தமாய்ப் பொங்கிக்கொண்டிருக்கும்.

பொன்னம்பலபிள்ளை கந்தபுராணக் கருத்துக்களின் உயர்வையுங் காவிய இரசனைகளின் அளவையும் நன்கு அறிந்தவர். காவிய இரசனைகளைப் பொன்னம்பலபிள்ளை தலைமறைவாகவே வைத்துக்கொண்டார். நாவலர் அவர்கள் தென்னிந்தியாவுக்குப் போகிற காலங்களிலே சபாபதிச்செட்டியாரென்பவர் வீட்டில், பொன்னம்பலபிள்ளை, வித்துவமணியைத்தித்தித்துக் காட்டுவதுண்டு. சிந்தாமணி பொன்னம்பலபிள்ளைக்கு மனப்பாடம். அக்காவியம், தன்னைக் கெடுத்துவிட்டது என்றுஞ்சில சமயங்களிற் சொல்லுவாராம்; அதனை அதற்குரிய வரிசையில் வைத்து அவர் வழங்கி வந்தார்.

நாவலர் அவர்களுக்குப் பிறகு ஒரு சமயம் பொன்னம்பலபிள்ளை கம்பராமாயண இரசனை மிகுதியினாலே வண்ணை வைத்தியேசுவரன்கோவிலிலே இராமாயண வியாக்கியானம் ஆரம்பித்தார், அது காவிய இரசிகர்களுக்குக் கிடைத்தற்கரிய தொரு அமிர்தபானமாயிருந்தது. எனினும், அருணூல்களுக்குரிய கோயிற் சந்நிதியில் அது நடப்பது என்ற கருத்தும் இருந்தது. பொன்னம்பலபிள்ளைக்கு எதிர் சொல்ல ஆள் ஆர்? நாவலர் அவர்கள் இல்லையே. கம்பராமாயண இரசனை பெருகியது. வாளிவதை உச்சநிலையை எய்தியது. அவ்வளவேதான் நடந்தது. அந்த அளவிற் பொன்னம்பலபிள்ளை இரசிகர்கள் கதறக்கதற மறைந்துவிட்டார். வாலிக்கு அம்பு விட்ட சோகம் பொன்னம்பலபிள்ளையை இழந்தசோகம் ஆயிற்று.

பொன்னம்பலபிள்ளையின் காவிய இரசனைக்கு, கண்ட

(2-ம் பக்கம் பார்க்க)

## உருவகக் கதை

# சின்னம்

— எம். ஏ. ரஃமான் —

பூலோகத்திலிருந்து வரும் மனிதக் குரல்களைக் கேட்பதற்காகக் கர்த்தர் தமது காதைக் கூர்மையாக வைத்திருந்தார்.

அப்பொழுது, அவருக்குச் சினமூட்டும் வகையிலே சாத்தான் சிரித்தான். அவன் இரைச்சலாக அட்டகாசிக்கும் ஒலித்தது.

கர்த்தர் முறுவலித்தார்.

சாத்தான் அவர்முன் தோன்றினான்.

"கர்த்தரே! நீர் ஏன் உமது சாயலில் மனிதரைப் படைத்தீர்?"

"எம்மைச் சேவிக்க..."

"கீழே குனிந்து பாருங்கள், நீங்கள் படைத்த மனிதப் புழுக்கள் பசியுடன் துடிப்பதை... ஞானப் பழத்தைச் சாப்பிட்டதிலே அவனுக்குப் பசியுணர்வு ஏற்பட்டதாக யான் அறியேன்."

"மனிதனுக்கு என்னுடைய ஞாபகசக்தியை யாம் படைக்கவில்லை."

"அதற்காக...?"

"பசி வேளையிலாவது கர்த்தரின் ஞாபகம் ஏற்படுமல்லவா?"

மீண்டுஞ் சாத்தான் சிரிக்கத் தொடங்கினான்.

"சாத்தானே! என் பின்னாலே போ!"—எனக் கண்டித்தார். சாத்தான் பின்னால் மறைந்தான்.

மௌனம் நிலவியது. அதனை ஊடுருவிக்கொண்டு, மனிதனின் மெல்லிய குரல் அவர் செவிகளில் வீழ்ந்தன.

"பரமண்டலங்களிலேயுள்ள எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக!...அன்றன்றுள்ள எங்களப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்..."





சவுக்காரம் வாங்கும் போது
மில்க்வைற் நீல சவுக்காரம் என்று
கேட்டு வாங்குங்கள்.
இது ஒரு சிறந்த தயாரிப்பு.
மில்க் வைற்
நீல சவுக்காரம் ஒன்றே
உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU, Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி மீ 18உ (31-5-64)

# பஞ்சசீல வருஷம்!

"யேசுநாதர் சிலுவையில் உயிர் நீத்த போது பூமி அதிர்ந்தது; கோல்கோதா குன்று இரண்டாகப் பிளந்தது; சிலுவை இருந்த இடம் அப்படியே பூமிக்குள் போய்விட்டது" என்று சொல்லப்படுகிறது. சமீப காலத்திலும் மகான்கள் உயிர் நீத்த சமயத்தில் வானத்தில் திடீரென ஒளி தோன்றியதாகவும் வேறுபல அறிகுறிகள் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது. உத்தமர்களின் மரணத்தை கண்டு உலக மாதாவே கலங்குகிருள் என்பதற்கு இவை அடையாளமா. நேருவின் இறுதி யாத்திரை ஆரம்பமாவதற்கு சுமார் ஒரு மணி நேரத்துக்கு முன் புதுடில்லியில் பூமி அதிர்ந்தது. அவதான நிலையமே இதை அறிவித்தது. ஒப்பற்ற தலைவனை, மாந்தருள் மாணிக்கத்தை அக்கினி அணைத்துக் கொள்ளப்போகிறதேயென்று நினைத்ததும் நிலமகள் நிலைகுலைந்து நடுங்கினளோ! அன்பும், பண்பும், ஈவும், இரக்கமும், தியாகமும், சேவையும் ஒருருவாய் அமைந்த பாரத ரத்தினத்தின் பாதங்கள் இனிதன்மீது பதியமாட்டாதென்பதை நினைத்ததும் பூமகள் பதைபதைத்தாளோ!

இரண்டு வல்லரசு முகாம்கள் தோன்றி அணு ஆயுதங்களைப் போட்டிபோட்டு உற்பத்தி செய்து எச்சமயத்திலும் யுத்தம் ஏற்படக்கூடிய அபாயம் இருந்தபோது, ஆயுதமில்லாமலே மூன்ருவது 'வல்லரசை' அமைத்து பூமியில் ரணகளம் ஏற்படாமல் தடுத்த சமாதானத் தூதுவன் மறைந்து விட்டதும் இனி என்னவாகுமோ என்று எண்ணிய பூமாதேவி இவ்வாறு அஞ்சி நடுநடுங்கினளோ! அல்லது "மூன்ருவது உலகப்போர் தோன்றினல் அழிவது அமெரிக்காவோ, ரஷ்யாவோ அல்ல, உலக நாகரிகமே அழிந்துவிடும்" என்று எச்சரித்து உலகை அழிவிலிருந்து தடுத்து வைத்த உத்தமன் பிரிவால் உலக மாதா நடுங்கினளோ!

உலக மாதாவின் கவலையை நீக்க முடியாதா? உத்தமர் நேரு உலக அரங்கில் கடைசியாகப் பேசுகையில் ஒரு யோசனை தெரிவித்தார். அந்த யோசனையைச் செயல்படுத்தி உலகில் சமாதானம் நிலவச் செய்யவேண்டும். சமாதானம் நிரந்தரசமாதானமாக, என்றென்றும் நிலவும் சமாதானமாக இருக்கவேண்டும். அவ்விதம் செய்தால் உலகமாதாவின் கவலை நீங்கும். "1965-ம் வருடத்தை உலகசமாதான வருடமாக அனுஷ்டிக்க வேண்டும்" என்று சமாதான வீரர் ஜவஹர்லால் நேரு ஐக்கிய நாடுகள் சபையில் யோசனை தெரிவித்திருந்தார். இந்த யோசனையை அப்பொழுது பல நாடுகள் ஆதரித்தன. அதைச் செயல் படுத்தவேண்டிய சமயம் வந்துவிட்டதென்றே சொல்வோம்.

சமாதான வருடத்தில் எந்த நாட்டிலும் சண்டை சச்சரவுகள் இருக்கக்கூடாது. அவை எல்லைப் பிரச்னையாக இருந்தாலும் சரி, உள்நாட்டுப் பிரச்னைகளாக இருந்தாலும்சரி சகல பிரச்னைகளையும் பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துக்கொள்ள வேண்டும். உலகிற்கு அவர் அளித்த பஞ்சசீலக் கொள்கையை அந்த வருடத்தில் கடைப்பிடித்தால் உலகில் சமாதானம் நிலவும். ஒரு வருடத்தில் அனுஷ்டிக்கப்படும் சமாதானம் பின்னரும்தொடர்ந்து நிரந்தர சமாதானத்துக்கு வழிவகுக்குமென்று நம்பலாம்.

"பகைமையை ஒழித்த உலகம்தான் நேருவுக்கு நிறுவக்கூடிய சிறந்த நினைவுச் சின்னம்" என்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சன் சரியாகச் சொன்னர். சண்டையில்லாத உலகத்தை உருவாக்க வேண்டிய முக்கிய பொறுப்பு முக்கியமாக வல்லரசுகளிடம் தான் உள்ளது. ஒரு மனிதரின் மறைவுக்காக உலகமெங்கும் கண்கலங்கிய உருக்கமான காட்சியை இப்பொழுதுதான் கண்டிருக்கிறோம். அவர் தனிமனிதரல்ல; உலகமகா புருஷர். அவர் மீது கொண்டிருக்கும் அன்பு உண்மையான அன்பாக இருக்குமானல் உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவது உலகநாடுகளுக்கு சிரமமல்ல. அவர் அளித்த பஞ்சசீலக் கொள்கையை உலகநாடுகள் மனப்பூர்வமாகக்கடைப்பிடித்து ஒழுகினல் நிச்சயம் உலகில் நிரந்தர சமாதானம் தோன்றும்; மக்கள் அமைதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வர்; சுபிட்சம் நிலவும்.

அமெரிக்க ஜனதிபதி கூறியதுபோல் நேருவுக்கு நினைவுச் சின்னமாக, "சண்டைபோடாத உலகத்தை உருவாக்குவதற்கு முதற்படியாக" நேருவே தெரிவித்த யோசனையின்படி 1965-ம் வருடத்தை 'சமாதான வருடமாக' அனுஷ்டிக்க வேண்டும். அதற்கு ஜவஹர்லால் நேரு வருடம் என்றே 'பஞ்சசீல வருடம்' என்றே பெயரிடுவது கூட மிகப்பொருத்தமாக இருக்கும். இதை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமே முன்னின்று செயல்படுத்த வேண்டும். இவ்விதமான தொரு சமாதான உலகத்தை உருவாக்குவது நேருவுக்கு நிறுவப்படும் நினைவுச் சின்னமாக மட்டும் அமையாது; உலக மாதாவின் கலக்கத்தையும் அது நீக்குவதாகும்.

# அணைந்ததோ ஆசிய ஜோதி, ஓய்ந்ததோ பாரதச் சங்கு!

— வி. என். பி. —

"எங்கும் நிறைந்தாயே, இன்று எங்குமறைந்தனையோ!'

1948-ம் வருடம் ஜனவரி 30-ம் திகதி பாபுஜியின் மார்பில் துப்பாக்கிக்குண்டு தைத்த போது, 'உலகமே இருண்டு விட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளிக்கிறேன்' என்று கதறினயே! இன்று பாரத நாட்டிலுள்ள 40 கோடி சொச்சம் மக்களும் பசுவை இழந்த கன்றுபோல் தவிதவிக்கின்றனரே!

1889-ம் வருடம் நவம்பர் 14-ம் திகதி பிறந்தாய். பாலபராயத்தில் உன்னை தேவகுமாரனெனச்செல்வமாய்வளர்த்தனர் அன்னை சொருபராணியும் தந்தை மோதிலால் நேருவும். 'ஆனந்தபவன'த்தில் நீ அரசிளங் குமரன் போல் துள்ளித்திரிந்தாய். ஐரோப்பிய தாதிமார் உன்னை ஒக்கலையில் வைத்தனர். ஆங்கிலேய ஆசிரியர் உனக்கு அரிச்சுவடி கற்பித்தார். 1905-ம் வருடம் உன் அருமைத் தந்தை உன்னை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்ருர். ஹாரோ கலாசாலையில் உன்னைச் சேர்த்தார். அங்கே பரோடா, கபூர்தாலா, மஹாராஜக் குமாரர்கள் உன் சக மாணவர்களாயிருந்தார்கள். பின்னர் கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் சேர்ந்து பட்டம்பெற்ருய். 1912-ம் வருடம் பாரிஸ்டர் பட்டத்துடன் இந்தியா திரும்பினய். அலஹாபாத் உயர் நீதிமன்றத்தில் சிலகாலம் தொழில் புரிந்தாய். அது உனக்குக் கசந்தது.

பாலகங்காதர திலகர், அனிபெசன்ட் அம்மையார், தேஜ்பகதூர் சப்ரு, மதன் மோஹன் மாளவியா முதலிய தேசபக்த தீரர்களின் சகவாசம் உனக்கு வாய்த்தது. தொழில் போனல் போகிறது, அரசியல் தொண்டு தான் என் லட்சியம் என்று உறுதிபூண்டு விட்டாய். 1916-ம் வருடம் லட்சுமண புரியில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் முதல்முதலாக காந்திஜியைச் சந்தித்தாய். அன்று முதல் அவரின் மாயவலையில் சிக்கினய். அவருடைய அஹிம்சை, சத்தியாக்கிரகம் என்பதெல்லாம் அரசியலுக்கு ஒத்துவராது என்று நீ அடிக்கடி சொல்வாய். அவருடைய கொள்கைகளை எதிர்ப்பாய். ஆனல் இறுதியில் அந்தப் பொக்குவாய்க் கிழவனுக்குத்தான் நீ அடக்கம். அவருடைய வாரிசுமானய்.

கிழவர் 74-வது வயதில் மத வெறிக்குப்பலியானர். நீ 75 வயதுமுடியுமுன்னரே அவரைத் தேடிச்சென்றுவிட்டாய்.

இன்று தேவலோகத்தில் பெரும் கொண்டாட்டம். பாபுஜியும், நேதாஜியும், வீர வல்லபரும், வீர சவர்க்காரும், அபுல்கலாம் ஆசாதும், ராஜேந்திரப்பிரசாதும், இன்னும் எத்தனை எத்தனையோ வீர பாரத மணிகளும் உன்னை அகமகிழ்வுடன் வரவேற்கிருர்கள். கமலா உனக்கு நெற்றியில் திலகமிட்டு வரவேற்கிருள். பாபுஜி 'மகனே, நீ உன் கடமையைச் சரிவர ஒப்பேற்றி விட்டாய்' என்று ஆசி கூறுகிருர். மோதிலாலும் சொருபராணியும் புன்முறுவலோடும், பெருமிதத்தோடும் உன்னைப் பார்க்கின்றனர்.

அங்கே கொண்டாட்டம்; இங்கே ......?

பாண்டுங் மகாநாட்டில் தோளோடு தோள் நின்று தொண்டு செய்த தோழன் சூஎன்லாய் இப்படி மாறிவிடுவான் என்று நீ எதிர்பார்க்கவே இல்லை. அவனுடைய நயவஞ்சகம் உனது உற்ருண்மையான நண்பன் கிருஷ்ண மேனனையும் உன்னையும் பிரித்து வைத்தது.

காஷ்மீரத்தில் ஷேக் அப்துல்லாவுக்காகப் போராடப் போய் நீயே சிறை சென்ருய். இன்றோ........?

நீ அமைத்த முதல் சுதந்திர சர்க்காரில் உன்சகாவாயிருந்த ராஜாஜி இன்று உனக்கு மாருகி நிற்கிருர்.

இதெல்லாம் சேர்ந்து உன் மனத்தில் வெறுப்பை உண்டு பண்ணிவிட்டதா? இல்லை. 1927-ம் வருடம் லட்சுமணபுரியில் பொலிஸாரிடம் வாங்கிய குண்டாந்தடி அடி கமலாவை இளம் வயதில் பிரிந்த கவலை, உலகில் சமாதானத்தை நிலைநாட்ட நீ வகுத்த பஞ்சசீலக் கொள்கை வெற்றி பெருதது இவையெல்லாமாகஉன் மனசில் கசப்பு உண்டாக்கினவா?

## சாவுமவனைத் தொடுமோ?

— பெரி. சண்முகநாதன் —

சொல்லெங்கே சொல்லெங்கே
சொல்லவொணுத் துயரத்தை
சொல்லவந்தேன் சொல்லெங்கே?
சொல்லடங்காத் துன்பமந்தோ!

நேருவினை நேர்மையினை
பாரிழந்த சேதிதனை
வாயுரைக்கத் தான்வருமோ?
வார்த்தைகளும் நடுங்கினவே!

பாரதத்தின் தனிப் பெருமை
பாருக்கோர் வழிகாட்டி;
சீரிழந்த மக்களுக்குச்
சிந்தையிலே நல்விளக்கு;

ஏங்கித் தவித்திருந்த
இந்தியரைக் கரைசேர்த்த
ஓங்கு புகழ் மாலுமிதான்
ஓய்வெடுக்கச் சென்ருனே?

வெறுப்பினை அன்பால் வெல்லும்
விதந்தனை வகுத்தாய்; உள்ளச்
செருக்கினை அடக்கந் தன்னல்
ஜெயித்திடும் வழியும் கண்டாய்;

நெருப்பினை கக்கும் கடும்
நேரலார் பகைமையெல்லாம்
சிரிப்பினல் மறையச் செய்யும்
தீரன் நீ நேரு வாழ்க!

அறிவால் வளர்ந்தோங்கி
அணுவைப் படையாக்கும்
திறமாம செருக்கினிலே
அன்புள்ளம் சிறுத்திட்ட

அவனிதான் அழியாமல்
அவன் வாக்கே காத்திடுமால்;
புவிமீதிற் சமத்துவ நற்
புது வாழ்வை நாட்டிடுமால்;

தந்தையவன் சாவானே
சாவுமவனைத் தொடுமோ?
என்றுமவன் வாழ்ந்திடுவான்
எம்மிடையே தங்கிடுவான்!

## வரதர் வெளியீடு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுப்பாசிரியர் திரு. தி. ச. வரதராசனின் உரையையும் சங்கத் துணைச் செயலாளர் திரு. சி. சரவணபவனின் நன்றியுரையையும் தொடர்ந்து நாட்டிய கலாரத்தினம் வே. ராஜரத்தினத்தின் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## திரு க. பே. முத்தையா மறைவுக்கு அனுதாபம்

'ஈழத்து இலக்கிய உலகில் "விடிவெள்ளி" அணைந்துவிட்டது. நண்பர் முத்தையாவின் மறைவு ஈடுசெய்ய முடியாத ஒரு பெரு நஷ்டமாகும். அவர் நல்லவர், பண்பாளர், ஆசிரியர், இனியவர், திட்டவட்டமான கொள்கைகளை உடையவர், கடவுளிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றும் கொண்டவர், பண்டைத் தமிழ் இலக்கியங்களில் திளைத்தவர், பிழையறத் தமிழ் எழுதிய எழுத்தாளர், எடுத்தவுடன் வெண்பா பாடும் ஆற்றல் பெற்றவர், எழுத்தாளர் மத்தியில் ஒற்றுமையின்மையைக் கண்டு மனம் வெதும்பியவர், குறைகண்ட இடத்து கூசாமல் கடிந்துரைக்குன்று, சிறந்த சமூக ஊழியர், சமூகத்தொண்டன் என்னும் இதழின் ஆசிரியராயிருந்து இலக்கியம் வளர்த்தவர்—அவர் இனியில்லை. அவர் மீது கொண்ட பிரியத்தினல் போலும் இளமையிலேயே இறைவன் அழைத்து அணைத்துக்கொண்டார். அவருடைய பிரிவால் வேதனைபடும் உறவினர், நண்பர் அனைவருக்கும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது'.

இவ்வாறு இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஓர் அனுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

# உலகமேடை

டீ.எம்.எம்

# நேருவுக்கு அஞ்சலி



நேருஜி, சயநலமும், சூழ்ச்சியும், பாவங்களும் மிக்க இந்த உலகத்திலிருந்து போய் விட்டீர். யுக யுகாந்திரங்கள் கழிந்தாலும் திரும்பமாட்டீர். ஆனால் எந்த உலகத்தில் நீர் இருந்தாலும் இந்த உலகத்தில் மட்டும் உமது கீர்த்தி பல்லாயிரம் பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்திருக்கும். அதற்கு முடிவே இல்லை. மண்ணும், கடலும் சேர்ந்த இந்தப் பூகோளம் அழிந்தால்தான் உம்முடைய நினைவும் அழியும். கடவுளே, எங்கள் வேதனைக்கு முடிவே இல்லையா?

சித்தார்த்தனைப்போல் நீ இந்த உலகுக்கு வந்தாய். உன்னை எப்படி மறப்போம். கோடிக்கணக்கான உள்ளங்களில் நீ எப்படித்தான் இடம் பெற்றாயோ? உம்மைப்போல் ஆதிமுதல் அந்தம் வரை அதிர்ஷ்டம் பெற்ற பாக்கியசாலி சரித்திரத்தில் இல்லை. எமக்குப் பொறுமை இல்லை. உம்மைப்பற்றிய பெருமையும், மகிழ்ச்சியுமே எம் உதிரத்தில் பரவி, நரம்புகள் புடைத்து, தலைவெடிக்கச்செய்கின்றன.

நீ பிறந்தது எந்த ஆண்டு? ஈசா, நான் ஏன் கேட்கிறேன். நீ உதித்தது 1889-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ந் திகதி என்பதுஎனக்கு நன்றாகத்தெரியுமே ஆனால்உன் விஷயத்தில் எல்லாமே எனக்குவிதிவிலக்குத்தான். உன்னைப்பற்றி என்ன அறிந்தாலும் எனக்குச்சலிப்பே ஏற்படுவதில்லை.

நீ இந்துவாய்ப் பிறந்தாலும் சித்தார்த்தனில் பற்றுக் கொண்டாய். உமது மேதை ஒப்புயர்வற்றது. உமது பகுத்தறிவுடன் எவரும் போட்டியிட முடியாது. நான் சிற்றறிவோன். சித்தார்த்தன் புத்த பெருமான் ஆனார். அருடைய வாழ்வும், போதனையும் உம்மைக்கவர்ந்தது. இதற்குச் சவால்விட எவருக்கும் துணிவு கிடையாது. நீ ஏன் சுத்தோதனன் மகன் சித்தார்த்தனில் பற்றுக்கொண்டாய் என்பது எனக்குத்தெரியும். அதற்குக் காரணம் நீயும் ஒரு சித்தார்த்தன் என்பதே ஆகும்.

சித்தார்த்தர் அரச குடும்பத்தில் தோன்றினார். ஆனால் நீ பெயரளவில் அரசகுடும்பத்தில் தோன்றவில்லை ஆயினும், அதே அந்தஸ்தும்,பெருமையும், கர்வமும் நிறைந்த கீர்த்தி வாய்ந்த குடும்பத்தில் தோன்றினாய்.

உம் தந்தை மோதிலால் நேரு மாபெரும் கோடீஸ்வரன். இந்திய மக்களின் இணையற்ற பெருந்தலைவன். கோடீஸ்வரக் குடும்பத்தில் நீ ஏக புதல்வனாய்த் தோன்றினாய். கேட்கவா வேண்டும்? உன்னை மகிழ்விக்க மோதிலால் என்னவெல்லாம் செய்தார்! அடகடவுளே,, முதன் முதல் நீ சிறைக்குப் போகுமுன் உன் தந்தை என்ன பாடுபட்டார்? அவர் இதயம் வெடிக்கும் நிலையில் அல்லவா இருந்தது? நீ சிறையில் எப்படி உழல்வாயோ என்பதைப் பார்க்க, சப்ரமஞ்சத்தில் படுத்த மோதிலால் தரையில் படுத்து பரீட்சைபார்க்கவில்லையா? அது இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது.

உன்னை மேற்கு நாட்டு சூழலுடன் வளர்த்தார்கள்.ஐரோப்பிய சூழ்நிலையில் நீ வளர்ந்தாய். அதே சமயம் கீழ் நாட்டு சூழலும் உனக்கிருந்தது. நீ பெரிய அறிவாளியானாய். கிழக்கும் மேற்கும் இணைந்த விசித்திரக்கலப்பாக நீ வளர்ந்தாய். ஆனால் நீ ஆங்கிலத்திலேயே சிந்தித்தாய். இதனால் உனக்கு தேசிய மனோபாவத்தை சர்வதேசிய அடிப்படையில் அணுகும் மனப்பக்குவம்அமைந்தது இந்த வகையில் நீதான் முதல்வன். இந்தியாவுக்கே இதனால் நன்மை ஏற்பட்டது. இந்தியாவுக்கு மட்டுமா? ஆசியாவும், ஆபிரிக்காவும் சேர்ந்த கிழக்கு உலகத்துக்கே உமது இந்த அடிப்படை வழிகாட்டியாய் அமைந்தது. ஆசிய ஆபிரிக்க மறுமலர்ச்சியின் சின்னமாய் நீ உருவெடுத்தாய் அல்லவா? இதனால் தானே பாரதகண்டத்தின் பெருமை உலகெங்கும் எதிரொலிக்கிறது?

நேருவே, ஆரம்பத்தில் உன்னைநான் புறக்கணித்தேன். முதன்முதல் எட்டாவது எட்வேர்ட் மன்னரையே என் இதய சிம்மாசனத்தில் ஏற்றினேன். ஆனால் சமுதாயத்தின் இளம் சந்ததியினர் மட்டுமே அவரை லட்சிய புருஷராகக் கொண்டார்கள். பின் அடால்ப் ஹிட்லரை வீரபுருடனாக வரித்தேன். ஆனால் நாஸிகளும், பாஸிஸ்டுகளுமே அவரை ஆதரித்தனர். எனினும்சரியானமனிதர் என் சிற்றறிவுக்கு எட்டாமலிருந்தார். கடைசியில் உம் பெருமைகளை அறிந்தேன். சரியான மனிதனைக் கண்டுவிட்டதாக அகமகிழ்ந்தேன். என் ஊகம் பிழைக்கவில்லை. உலகமே உம்மீதும், உம் கொள்கைகள் மீதும் அன்பு காட்டியது. எனவே உம்மை நான் லட்சிய புருடனாகக் கண்டது சரியானது, இறுதியானது என்பது அசைக்க முடியாத உறுதியாகிவிட்டது.

என் அன்புக்குரிய ஜவஹர்லால், உன்னிடம் அப்படி என்ன மந்திர சக்தி இருக்கிறது? உன் பழக்கவழக்கங்கள், நடையுடை பாவனைகள், சிந்தனைகள்,உனதுஉணவுமுறைகள் அனைத்தும் மேல்நாட்டுபாணியுடன் காணப்படுகின்றனவே. ஆயினும் உன் செயலின் அஸ்திவாரம் கீழ்நாட்டு அடிப்படையில் அமைந்திருந்தது. இந்த அடிப்படையில் நீ மேல்நாட்டு சிந்தனையைக் கலந்தாய். அதனுடன் தியாகத்தைச் சேர்த்தாய். எனவேதான் உன்னைப் போன்ற ஒரு ஒப்பற்ற மாணிக்கம் உலகில் இல்லை என ஐந்து கண்டங்களும், ஐந்துமகாசமுத்திரங்களும், பஞ்சமாபூதங்களும் பாமாலை பாடுகின்றன.

ஐயா,

"நேருவை நினைத்தவுடன் நேர்மைக் குணம் என்னும் மேருவை நிகர்த்த ஒளி மின்னி வரும் முன்னால்"என்று எங்கள் தமிழ்நாட்டுக் கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை பாடினார். அது மட்டுமல்ல, இந்தப்பரந்த உலகத்தில் எத்தனையோ மன்னர்கள் தோன்றினர் என்றும் இருந்தாலும் "எங்கள் நேருவுக்கு இணையானவர் எவருமே இல்லை" என்றும் அவர் கூறினார். உம் நேர்மையே என்னைப் பெரிதும் ஆட்கொண்டது. உம்மிடம் எத்தனையோ,நானாவிதக் கல்யாணகுணங்கள் இருந்தன. ஒப்பற்ற அரிய குணங்கள் அனைத்தும் சேர்ந்து நீ உருவெடுத்தாய். இது கடவுளின் சிருஷ்டி. உமக்கு தெய்வ நம்பிக்கை அவ்வளவு இல்லாதிருக்கலாம். ஆனால் எனது முடிவு இதுவே.

உம்மைப் புகழ்வதற்கு நான் ஏன் இன்னொருவருடைய கவிதையை உபயோகிக்க வேண்டும். நேரடியாகவே எனது சொந்த வழியில், சொந்தச்சிந்தனையில்நான் உம்மைப் புகழ தகுதியுடையவன் அல்லனோ?

கோடீஸ்வரக் குடும்பத்தில் ஏக புத்திரனாய் உதிப்பதில் எத்தனை தீமைகள் இருக்கின்றன? செல்லம் கொடுத்துக் கொடுத்து அந்தப் பிள்ளை கெட்டுவிடும். கூட்டிச்சுவராய் விடும். ஆனால் நீ!

இதிலே தான் அடிப்படை உண்மை புதைந்துகிடக்கிறது. நீ கெடவில்லையே.புடம்போட்ட தங்கமாய் அல்லவோ உருவெடுத்தாய்! இதன் விசித்திரம் தான் என்ன? நீ மட்டும் ஏன் இத்தனை அற்புதக் கல்யாண குணாதிசயங்களுடன் தோன்றினாய்? நீசரித்திரத்தின் சிருஷ்டி. உண்மை. ஆனால் நீ கடவுளின் அற்புத சிருஷ்டி.

கடந்த 50 ஆண்டுகளில், ஒரு அரை நூற்றாண்டில் இந்த உலகத்தை நீ அன்பினால் ஒரு ஆட்டு ஆட்டிவிட்டாயே. காந்திமகான் தன் சீடனிடமிருந்து இதைவிட என்னதான் எதிர்பார்க்க முடியும்? நீ கிழக்கே இருந்தாலும் உமது அபிப்பிராயம் என்னவென்பதை அறிய மேற்கேயும், மற்றெல்லாத் திசைகளிலும் ஆர்வம் காட்டப் பட்டதே. உம்மைத்தானே உலகத்தலைவர்களும் உலக சபைகளும் அதிகமாக மதித்தார்கள். இதற்குக் காரணம் என்ன நேருஜீ? சொல்ல மாட்டீரா? ஆனால் உமக்கு அது தெரியாது. எனக்குத் தெரியும்.

நீ பணக்காரப் பிள்ளையாய்ப் பிறந்தும் சித்தார்த்தரைப் போல் ஏழைகளின் துக்கத்தில் பங்கு கொண்டாய். 14 ஆண்டுகள் சிறையில் கடுந்தவம் புரிந்தாய். உமது சொத்துக்களை இழந்தாய். சுகத்தைப் பரித்தியாகம் செய்தாய். சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டாய். வெற்றிகண்டாய். அது மட்டுமா?

உமது தோற்றம் வசீகரமாய் இருக்கிறது. உமது அறிவு உலகையே கவர்ந்தது. உமது சரித்திர ஞானம், விஞ்ஞான அறிவு, அரசியல் -ராஜதந்திரத் திறமை, உமது நேர்த்தியான பழக்க வழக்கம், விரிந்துபரந்த உமது மனப்பான்மை, உமது எழுத்துத்திறமை, பேச்சுத் திறமை, உமது கலா ஞானம், ரசிகத் தன்மை, சர்வதேச ஞானம், சிந்தனை சக்தி, பொறுமை, நேர்மை, செயல் திறமை, சுறுசுறுப்பு, தேச பக்தி, தியாகம், எளியோர்களிடம் காட்டும் இரக்கம், மனிதாபிமானம், உலகுக்கு வழிகாட்டும் ஆற்றல் அனைத்தும் எப்படித்தான் ஒன்றாக அமைந்ததோ. நீர் இயற்கை என்பீர். ஆனால் நான் ஏற்கமாட்டேன். கடவுளின் விசித்திர சிருஷ்டியே இதுஎன்பேன்.

ஓர் இந்தியன் என்ற அடிப்படையில் உம்மீது எவராவது பற்றுக்கொண்டால் அவன் அறிவிலி. அவன் தண்டனைக்குரியவன். அதை நான் ஏற்கவும் மாட்டேன் உலகின் எந்தப்பகுதியில் இருப்பவனும் உம் குணத்தால் கவரப்படாமலிருந்தால் அது அவனுடைய துரதிர்ஷ்டம். ஆனால் நிலைமை அப்படியில்லை. உலகம் முழுதும் உமது கவர்ச்சிபரவியிருக்கிறது. உலகின் எப்பகுதியிலுமிருக்கும், ஒரு நேர்மையாளன் லட்சிய புருடனாகக் கொள்வதற்கு, ஜவகர்லாலே உன்னைவிடத் தகுதியானவர் எவருமில்லை. உன்னை இந்தியன் மட்டுமா புகழுகிறான். உலகமே புகழுகிறதே. அடடா. என்ன புகழ்! என்ன கீர்த்தி!! கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் உலகத்தின் எட்டுத்திசைகளிலும் உன்னை அன்புடன் வரவேற்காதவர் யார்? நேரு, நீ முடிவிலாக் கீர்த்திபெற்றாய். உன்னிடம் பொறாமை என்ன செய்யும்? வஞ்சம் தான் என்னசெய்யும்? யாரேனும் பாறையிலே தலையைமோதிக்கொள்வார்களோ?

ஜவஹர்லாலே, என் அன்பிற்கு உரியவனே, ஒப்பிலாத் தலைவனே உலகத்தின் தவப புதல்வா, உத்தம புத்திரனே, இதை எழுதும்போது என் கண்களிலிருந்து தாரைதாரையாய்க் கண்ணீர் வடிகிறது ஐயா. உலகத்தில் உன்னை விடச் சிறந்தவர் எவரும் உண்டோ? உலகப் பெரியார்கள் இரண்டு மூன்றுபேரையும் நிறுத்தி சர்வதேசத்திலும் "சர்வஜனவாக்கெடுப்பு" நடத்தப்பட்டால் நிச்சயமாக உனக்குத்தான் அதிக வாக்குகள் கிடைக்கும்.

புராணகாலம், வேதகாலம், இதிகாசகாலம், சரித்திரகாலம் ஆகியவற்றில் பாரதகண்டம் எத்தனையோ ரிஷிகளையும், முனிபுங்கவர்களையும், இதிகாச நாயகர்களையும், சரித்திர புருடர்களையும் உற்பத்திசெய்தது. நான்காவதான சரித்திர காலத்தில் கீர்த்திபெற்ற உலகப் புதல்வர்களில் ஒருவனாய் நீ உருவெடுத்தாய். ஆரம்பத்தில் சரித்திரம்தான் உன்னை வளர்த்துவிட்டது. உண்மை. ஆனால் வளர்ந்தபின், நீயல்லவோ சரித்திரத்தை உருவாக்கினாய்?

பெருமைமிக்கவனே, போய்விட்டாயா? போய்வா. எங்கே வரப்போகிறாய்? ஆனால் உன்னுடைய காலத்திலும் உன் குருவான காந்திமகாத்மாவின் காலத்திலும் இந்த உலகத்தில் வாழ்ந்தோம் என்ற பெருமையாவது எங்களுக்குக் கிடைக்கிறதே. அதுவே போதும். உனக்கென்ன குறை? நீ காந்தியுடன் பழகினாய் மறைந்தபின் அவருக்கருகிலேயேசமாதியாகி 'காந்தி'யுடன் பிரகாசிக்கிறாய்.

இந்தியாவின் இருதயமாக விளங்கினாய் நீ. உன்னிடமிருந்தே இந்திய மாதாவின் உடலில் இரத்தோட்டம் பரவியது. ஆனால் இப்போது நீ எந்த உலகத்தில் இருந்தாலும் எல்லா இருதயமும் உன்னிடமேஇருக்கிறது. போய்வா. நாங்கள் இருக்கும்வரை—எங்கள் சந்ததிகள் இருக்கும் வரை—யுகம் யுகாந்திரங்கள் இருக்கும்வரை—இந்த உலகம் இருக்கும்வரை நீ இருப்பாய்.

பாரதச் செல்வா, மாந்தருக்குள் மாணிக்கமே, ஒப்பற்ற தலைவனே,போய்வா,போய்வா எங்கள் வேதனையை அதிகப் படுத்தாதே. போய்வா.

## "வரதர் வெளியீடு தமிழுக்கு ஒரு புதுமை"

"தமிழில் கருவிநூல்களும் இன்று நிறையத் தேவைப் படுகின்றன. பல குறிப்பு, கலைக்களஞ்சியம் போன்றவை வெளிவருவதை நாம் வரவேற்க வேண்டும்" என்று இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்திய வரதரின் பலகுறிப்பு வெளியீட்டு விழாவில் வாழ்த்துரை வழங்கிய திரு. ஹண்டி பேரின்பநாயகம் குறிப்பிட்டார். முதலியார் செ. சின்னத்தம்பி தலைமையில் வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய மண்டபத்தில் சங்கீதபூஷணம் என். கணபதிப்பிள்ளை பாடிய தமிழ் வாழ்த்துடன் விழா தொடங்கியது.

செயலாளர் இ. மகாதேவன் கூறியவரவேற்புரையையும் தலைவரின் தலைமை உரையையும் தொடர்ந்து திரு. ஹண்டி பேரின்பநாயகம் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

இலங்கைத் தமிழ்ச் சிறாருக்கென இன்று ஒரு கலைக்களஞ்சியம் அத்தியாவசியம் தேவை. அதைப் பூர்த்திசெய்ய யாராவது முன்வரவேண்டும்.

வெளியீட்டுரை நிகழ்த்திய திரு. அ. அமிர்தலிங்கம் கூறியதாவது:-

ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஆங்கிலத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் டிரெக்டரி இன்று தமிழில் முதல் முதலாக வெளிவருகிறது. தமிழ் மூலம் கல்வியும், தமிழ் மூலம் எதையும் செய்யும் அவசியமும் தமிழில் ஒரு பலகுறிப்பின் தேவையை அதிகமாக்குகிறது. தமிழ் மக்கள் தேவைகளை மனதில் கொண்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.

முதற்படியை திரு. எஸ். கனகசபை (சிறாப்பர்) பெற்றுக்கொண்டார்.

திரு. எஸ். ஆர். கனகநாயகம், திரு. இராஜ அரியரத்தினம், திருமதி வள்ளிநாயகி ராமலிங்கம் (குறமகள்) ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

# யாத்திரிகன்

தொடர் கதை

"நீலாம்பரி"

பிரேதம் சுடலைக்குப் போனபின் சாவீட்டில் நிலவும் அமைதி அப்பொழுது ரயில் பெட்டிக்குள்ளே நிலவியது அந்த அமைதியில் மறைந்து போன ஆத்மாவைப்பற்றி வீட்டுக்காரரும் அங்குதங்கிய அயலவர்களில் இரண்டொரு பேரும் கிடுகுப்பந்தலில் தொங்கும் இலாந்தரின் மங்கிய வெளிச்சத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமலே தங்களுக்குள் ளாகப் பிரலாபித்துப் பெருமூச்சுவிட்டு கண்கலங்குவது போல தகப்பனும் மகளும் துக்கம் தோய்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்தார்கள். சற்றுவேளைக்குள்ளாக ரயில் அதன் நெடுவழிப்பயணத்துக்கு மீண்டும் சித்தமாகிவிட்டது. அதற்குஉண்டான புது எழுச்சியைப்போல பெரியவரிடமும் ஒரு புத்தெழுச்சி கிளர்ந்தது. புது உற்சாகத்தை வருவித்துக் கொண்டவர்போலப் பேசத் தொடங்கினர்.

"நம்மைவிட்டுப் போய்விட்டவளின் ஆத்மா சாந்தி அடைவதற்காக அவளது புனித அஸ்தியோடு யாத்திரை போய்க்கொண்டிருக்கிறோம். அன்பு வைத்தவர்களுடைய என்பும் சாம்பலும்கூட பிறர்க்குரிய பொருள்களாகும் என்று சொல்வார்கள். இந்த யாத்திரை உனது மனக்கலக்கத்தைப் போக்கி நமக்கெல்லாம் மனச்சாந்தி அளிக்கப்போகிறது என்றே மனம் எண்ணுகிறது காலமும் வேளையும் சமயமும் சந்தர்ப்பமும் நமக்குச் சொல்லிக்கொண்டு வருவதில்லை, திலகம் இதோ அநுராதபுரத்தில் ரயில் நிற்கப் போகிறது நின்றதும் நான் போய் தேநீர் வாங்கிவருகிறேன் நேரம் பன்னிரண்டு மணியாகிறது—" என்று சொல்லிவிட்டு அநுராதபுரத்தில் ரயில் தங்கியபோது இறங்கிச்சென்று மகளுக்குத் தேநீர் வாங்கிக் கொணர்ந்து கொடுத்தார். தேநீரை வாங்கிப் பருகிக்கொண்டே, "ஸ்டேஷன், இராணுவ படை ஆட்களின் நடமாட்டத்தினால் ஏக அமர்க்களப்படுகிறது. பக்கத்துப் பெட்டியில்தான் அத்தனைபேரும் போய் குவிந்தார்கள்" என்றாள் அவள்.

தகப்பன்: இந்தப்பக்கம் இராணுவப்படை அங்கே மற்றப் பக்கத்திலே சங்கப்பகுதி ஆட்கள். தலைமன்னார் கோச்சிலே சந்தேகப் பேர்வழிகள் பிரயாணம் செய்கிறதாக ஒரே பரபரப்பாயிருக்கிறது.

அவள்: முகத்திலே பாதித்தாடியும் கையிலே தோல்பையுமாக இராணுவப்படை ஆள் ஒருவன் இங்கேவந்து நுழைவதற்கு கதவில் கைவைத்தான். பிற்பாடு உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு "ஓ, லேடீஸ்-?" என்று சொல்லிக்கொண்டு ஒரேஓட்டமாக ஓடிப் போய்விட்டான். இவர்கள் எதற்காகத் தாடி வளர்க்க வேணும்? இராணுவத்தில் சேர்ந்தவர்கள் சந்யாசி ஆகிவிடுவதும் உண்டோ?

தகப்பன்: இருபது வருசத்துக்கு முன்பின்னாய் இருக்கும், ஒரு நத்தார் பண்டிகையின் போது உன் அத்தையைவீரிலிருந்து இப்படித்தான் ஒருநாள் அழைத்துக்கொண்டு வந்தேன். அன்றைக்கும் இதே மாதிரி பட்டாளத்து ஆட்கள் ஒரு ஸ்டேஷனில் வந்து கூடினர்கள். அவர்களில் கொஞ்சம் பேர் நாங்களிருந்த பெட்டிக்குள்ளே நுழைந்து விட்டார்கள். அப்பொழுது ஒருவனுடைய சப்பாத்துக்கால் அவளின் காலைச் சற்று நசித்துவிட்டது. அவள் 'ஊ' என்று கத்திவிட்டாள். மிதித்தவன் அவளுக்குப் பக்கத்தில் கீழே உட்கார்ந்து வலிக்கிறதா அம்மா என்று பரிவோடுகேட்டு அவள் காலை வருடத் தொடங்கினன். அவளுக்கு மனம் குழைந்துவிட்டது. அப்படியொன்றுமில்லையடா மகன் என்று அவனைத் தொட்டு ஆசனத்தில் உட்கார வைத்தாள். உனக்கு மூன்று வயசிருக்கும். அப்பொழுது உன் தாயார் உன்னை அவளிடம் ஒப்படைத்துவிட்டு காலமாகி விட, உன் நினைவாக இருந்து உனக்குத் தாயாகி விட்டாள்.

அவள்: அம்மாவை நான் கொஞ்சமும் நினைத்துப்பார்க்க முடியவில்லை ... என்ன, சுருட்டுப் பற்ற வைத்துவிட்டீர்களா அப்பா? இனிமேல் உங்களுக்குத் தூக்கமெங்கே வரப் போகுது?

தகப்பன்: பாதித்தாடி முழுத்தாடி முக்கால்தாடி என்றெல்லாம் பட்டாளத்து ஆட்கள் மாத்திரம்தானு தாடிவளர்க்கிருர்கள்? நான் கூடத்தான் சில காலம் தாடி வளர்த்தேன்.

அவள்: எப்பொழுது அப்பா, அம்மா காலமாகிய போதா?

தகப்பன்: அதற்கும் வெகு நாளைக்கு முன்பு. அப்போ எனக்கு கல்யாணமே ஆகவில்லை.

அவள்: அப்படியென்ருல் எதற்குத் தாடி வளர்த்தீர்கள்? அம்மாவைத்தான் கல்யாணம் செய்துகொள்வது; இல்லையென்ருல் தாடி வளர்த்து சந்யாசி ஆகிவிடுவது என்ரு?

தகப்பன்: அந்நாளில் என்னைச் சுற்றியிருந்தவர்கள் இந்த மாதிரிப் பலதும் பேசிக் கொள்வார்கள். சிலர் என்னிடம் நேரிலும் அதற்குக் காரணம் கேட்பார்கள்

அவள்: அப்பொழுதெல்லாம் அவர்களிடம் என்ன சொல்லித் தப்பிக் கொண்டீர்கள் நான் சொல்லட்டுமா? ஷேவ் எடுக்கவில்லை அதனால் தாடி வளர்கிறது என்றிருப்பீர்கள்?

தகப்பன்: ஒவ்வொருத்தனும் உன்னைப் போலத்தான் ஏதோ ஒன்று சொல்வான். உன் வீட்டிலே முகம் பார்க்கிற கண்ணடி உடைந்துபோய்விட்டதா என்றுகேட்பான். அடுத்த நாளைக்கு அவன் கண்ணடியை வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பான். இன்னொருத்தன் க்ஷவர பிளேட் பாக்கெற் ஒன்றை முழுசாக வாங்கிக் கொண்டுவந்து எனக்குத் தெரியாமல் என் சட்டைப் பையில் வைத்திருப்பான். வேறொருவன் பல பெண்களின் படங்களைக் கொண்டு வந்து காட்டி இவர்களில் யாரை நீ கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் சொல், உடனே ஆகும் என்பான். மற்றொருவன் என் நாற்காலிக்கருகே வந்து அமர்ந்து மிகஅநுதாபத்தோடு என் குடும்பத்தைப் பற்றியும் எனக்குள்ள குடும்பப் பொறுப்புகள்பற்றியும் அல்லல் தொல்லைகள் பற்றியும் ஆதியோடந்தமாக விசாரிப்பான். ஒன்றுக்கும் நான் இடம் கொடுக்காமலே "நான் தனி ஆள்" என்று சொல்லி முடித்தபோது "பின் எதற்காகத் தாடி வளர்க்கிருய் முட்டாள்?" என்று படுதோல்வியோடு எழுந்து போவான். தாடிக்கு இவ்வளவு கவர்ச்சி ஏன்என்று எனக்கே அதிசயமாயிருந்தது. ஒரு தினம் கண்ணடியில் நன்ருகப் பார்த்தேன். கலிவர் பயில்வானின் தலைமயிரில் லட்சம் பேர் பிடித்துத் தொங்கினர்களாம். எனது தாடியும் நேர்த்தியாக வளர்ந்திருந்தது.

(9-ம் பக்கம்பார்க்க)

# சிறுவர் பூங்கா

## நேருவும் குழந்தையும்



குழந்தைகளென்ருல் நேருஜிக்கு உயிர்; அவர்கள் மீது அலாதிப் பிரியம்; எங்கு ஒரு குழந்தையைக் கண்டாலும் தூக்கி அணைத்துக் கொள்ளாமல் விடமாட்டார். அவருக்குக் குழந்தைகள் மீதுள்ள பிரியத்துக்கு ஒரு சிறு உதாரணம்:-

ஒரு சமயம் ஒரு சிறுமி இவருக்கு ரோஜாப்பூவொன்றைப் பரிசாகக் கொடுப்பதற்காக இவர் வீட்டு வாசலில் இரண்டுநாள் காத்து நின்று மூன்ரும்நாள் அவருக்கு அதைக் கொடுத்தாள். அவளைக்கொண்டே அந்த ரோஜாவை தனது 'கோட்'டில் வைக்கச் செய்தார். அன்று தொடக்கம் அவர் தனது 'கோட்'டில் ரோஜாப்பூவை அவர் அணிய மறப்பதில்லை. தினம் அவரது 'கோட்'டில் அழகான ரோஜாப் பூவொன்றைக் காணலாம்.

— 'கடவுள்'

நேருஜி

## கோபக்காரர்; மறதிக்காரர்!

— பாமா ராஜகோபால் —

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் நேருஜி பொல்லாத கோபக்காரர். அவருக்குக் கோபம் வந்துவிட்டால் போதும்; அவரைப் பார்க்கவே முடியாது! அருகேயிருப்பவர்கள் யார் என்பதைக் கூட மறந்துவிடுவார்.

எம் இதயத்தையெல்லாம் வேதனைக் கடலில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்ட நேருஜிக்கு ஒருநாள் கோபம் அளவுக்கு மீறிவந்துவிட்டது.

அவர் அருகில் அவருடைய புதல்வி இந்திரா காந்தி, இன்னும் சிலர் இருந்தார்கள். அப்போது நடந்த ஒரு சுவையான சம்பவம்தான் இது.

தனது முக்கிய 'பைல்'களில் ஒன்றைக் காணவில்லை என்று நேருஜி துள்ளிக்குதித்துக் கொண்டிருந்தார் கோப மிகுதியினல்! அவர் புதல்வி இந்திரா காந்தி மிகவும் பயத்துடன் அங்குமிங்குமாக தன் தந்தை காணவில்லை என்று குறிப்பிடும் 'பைல்'லைத் தேடிக் கொண்டிருந்தார்.

ஆனல் —

'பைல்' கண்டுபிடிக்கப் பட்டேயில்லை.

நேருஜிக்குக் கோபம் கூடக் கூடவே அவர் எரிந்துவிழத் தொடங்கினர்.

அவர் புதல்விக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன் தந்தையின் கோபத்தைத் தணிப்பது எப்படி என்று சிந்தித்துப் பார்த்தார். எதுவும் அவருக்குப் புலப்படவில்லை. அந்தத் 'தொலைந்த பைலை' எடுத்தாலொழிய தந்தையின் கோபத்தை இனித் தணிக்க முடியாது என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது.

அப்போது —

நேருஜி தான் அமர்ந்திருந்த கதிரையைவிட்டுக் கோபமிகுதியினல் எழும்பினர். அங்கே —

எல்லோருக்குமே ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும், சிரிப்பையும் கொடுக்கக் கூடிய ஒன்று காத்துக் கிடந்தது. வேறெதுவுமல்ல! நேருஜியின் கோபத்துக்குக் காரணமாக இருந்த அந்த 'பைல்'தான்!

★

## அன்பால் இன்பம் கொள்ளையடா!

— குமார் தனபால் —

பல்லுப் போனல்
பொக்கையடா
பழத்தில் மிஞ்சுது
சக்கையடா
எள்ளில் வருவது
எண்ணையடா
இளநீர் தருவது
தென்னையடா!

வாலிபம் போனல்
கவலையடா
வார்த்தைகள் மிஞ்சினல்
கலகமடா
போலிகள் உலகில்
அதிகமடா
போதித்து வாழ்ந்தால்
ஞானியடா!

பார்வை போனல்
குருடனடா
பழிகள் செய்தால்
பாவியடா
நேர்மை மறந்தால்
துரோகியடா
நேசத்தால் வாழ்வது
வாழ்க்கையடா!

காசு போனல்
ஏழையடா
கவலைப் படுவான்
கோழையடா
ஆசை வந்தால்
தொல்லையடா
அன்பால் இன்பம்
கொள்ளையடா!

ஒரு சமயம் நேருஜி பஞ்ஜாப்பில் நடந்த கூட்டமொன்றில் பேசுவதற்காகப் போயிருந்தார். அங்கே அவர் பேசிமுடித்து விட்டு மேடையில் அமரப் போகிற சமயத்தில், கூட்டத்திலிருந்த பஞ்ஜாபிகள் சிலர் நேருஜி மீது கொண்ட அளவற்ற அன்பினலும் பற்றினலும் உணர்ச்சி வசப்பட்டு அவர் காலில் விழுந்து தொட்டு வணங்கினர்கள்.

இவர்களின் இத் திடீர்ச் செய்கை நேருஜிக்கு அளவற்ற கோபத்தை உண்டாக்கியது. அவர்களைப் பார்த்து "ஒரு இந்தியன் எந்த ஒருவனுடைய காலிலும் விழுவது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது" என்று கர்ஜித்தார்.

குழந்தைகளின் வாயிலிருந்து அறிவுஞானம் பிறக்கிறது என்று ஏசு சொன்னர். இதைவிடப் பெரிய பெருமைவாய்ந்த உண்மையை அவர் சொன்னது கிடையாது. அவர் சொன்னதை நான் நம்புகிறேன். பணிவோடும் சூதுவாதில்லாமலும் குழந்தைகளை அணுகினேமானல் அவர்களிடமிருந்து அறிவுஞானத்தை நாம் கற்றுக்கொள்ளுவோம் என்பதை என் அனுபவத்திலேயே பார்த்திருக்கிறேன்.

— காந்தியடிகள்.

## மலையக அழகு!

— துரையர் —

ஓங்கி வளர்ந்த
மலையடா—காட்சி
உள்ளம்மகிழும் நிலையடா
தேங்கி வழியும்
அழகடா—தம்பி
தேயிலை நிறைந்த
மலையடா.

பாய்ந்து செல்லும்
அருவியிலே—தம்பி
பாலர் தொடக்கம்
ஆடிடுவர்
காய்ந்த முகமாய்
பெண்களுமே—நல்ல
கனுவை எடுப்பதைப்
பாருமடா.

காற்று முகிலைத்
தள்ளிடவே—அதுவும்
கட்டிய வீட்டினிற்
சென்றிடுமே
ஏற்ற சாளரம்
இல்லையெனில்—வீட்டில்
எப்படி மலையவர்
உறங்கிடுவர்.

பனியும் நிறைந்த
மலையடா—தம்பி
பல்லும் ஆடிடும்
குளிரடா
கனியும் ஊற்றின்
அழகினையே—தம்பி
கண்டு களித்திட
வாராயோ.

# விதியின் கொடுமை

என்னைப் போன்ற 'துர்ப்பாய்க்கியவதி' "துன்பத்தால் வெந்து போனவள்" வேறு யாருமிந்த உலகில் இருக்க முடியாது. என் ஆசைகளும், உணர்ச்சிகளும் எரிந்து சாம்பராகி விட்டன. நடைபபிணமான நான் சாவுக்குப் பலியாகத் தயாராக இருக்கிறேன். சாவு என்னிடம் ஏனோவரப் பயப்படுகிறது.

என் கதையைச் சொல்லும் போதும், எண்ணும் போதும் நான் அழாத நேரமிருக்காது. அழுது ஓய்ந்த பின்னர் என் இதயத்திலிருந்த பாரம் சிறிது குறைந்ததுபோலத் தோன்றும். அதற்காகவே அழுவேன். ஆனால் இப்போது அதெல்லாம் எனக்கு வேடிக்கையாகத் தெரிகிறது. விநோதமாகத் தோன்றுகிறது. கடவுள் விந்தையானவர். அவர் விளையாடும் விளையாட்டும் அதைவிட விந்தையானது. அழுதும் தொழுதும் அவரிடம் பெற்றுவிட்டவை அனந்தம் என்று நினைத்து நெஞ்சம்மகிழ்ந்தேன். ஆனால் எந்தக்கடவுள் அவரை என்னிடம் சேர்த்து வைத்ததோ, அதே கடவுள் அவரை என்னிடமிருந்து பிரித்து எடுத்தது. திருமணமாகியும் அத்தானுடன் வாழமுடியாத மாபாவியாக இருந்தேன். அவருக்காக அன்பால் என்னிதயத்தில் ஓர் ஆலயத்தையே கட்டியெழுப்பினேன். ஆனால் அவரோ வேறு ஒருவருக்காக உள்ளத்தைத்திறந்து வைத்துக்கொண்டிருந்தார்.

பழைய 'பஸ்ராண்ட்' தான் எமது காதல் சாம்ராச்சியம். இன்று பாழடைந்து கிடக்கும் அந்த மண்டபத்தில் அவருக்காக அன்று நான் எந்த நேரத்தில் எத்தனை காலம் காத்துக்கிடந்தேனோ எனக்கே தெரியாது. அத்தான் அருகு வந்துவிட்டால்போதும். நான் என்னையே மறந்து நிற்கும் இடத்தையும், அதிலிருக்கும் அனேக பிரயாணிகளையும் மறந்து அவரையே விழுங்குவது போல விழிகளால் பார்த்துக்கொண்டு நிற்பேன். என்கரங்கள் அவர் கையிலிருக்கும் புத்தகத்தை பறிக்கும். அதிலிருக்கும் கடிதத்தை எடுத்து விட இதயம் துடிக்கும்.

பஸ்கம்பனி வேலை நிறுத்தம் செய்த நாட்களில் ஒரு நாளிரவு நானும் அத்தானும் பஸ்ராண்டுக்கு வரும்போது எட்டுமணியிருக்கும். ஒரு 'பஸ்' ஸுமில்லை. எப்படிப்போவதென்று விழித்துக்கொண்டு, அவர் பேச்சில் அக்கறையில்லாமல் ஏதோ யோசித்துக்கொண்டே வந்தேன். என் நிலையைப் புரிந்துகொண்ட அவர் ஒரு காரிலே என்னை வீட்டில் விட்டுப் போனார். அன்றுதான் முதன் முதலாக அவரின் பேச்சு என் வீட்டில் எழுந்தது. என் தாய், தங்கை, அண்ணன் எல்லோரும் அவரைப்பற்றி ஒரே கேள்விகளாகக் கேட்டுத் துளைத்தார்கள். அவர் அந்தஸ்திலும், சமயத்திலும் ஏன் சாதியிலும் கூட வேறுபட்டவர் - மாறுபட்டவர் என்றதும் என் தாயார் அடைந்த வேதனையை என்னால் உணர முடிந்தது. அதே வேதனை முகத்தைத்தான் அவரிடம் இன்றும் காண்கிறேன். ஆனால் அன்று வாடிய தாயாருக்கு "அவர் என்னை ஒருபோதும் கைவிடமாட்டார் அம்மா" என்று துணிந்து கூறி தைரியத்தோடு தெம்பூட்டினேன். இன்றோ வாய் திறந்து பேசமுடியாத பரிதாப நிலையில் இருக்கிறேன்.

இருவரும் ஒன்றாக ஒரே கல்லூரியில் தான படித்தோம். படிக்கும்போது வகுப்பிலோ - வெளியிலோ நான் அவருடன் அதிகம் பேசுவதல்லை. அவர் மட்டும் என்னிடம் பேசுவார். என்னுடைய உடைகளைத் தரும்படி கெஞ்சுவார். அவர், நாடகங்களில் பெண் பாத்திரத்தில், தான் பிரமாதமாக நடிப்பாராம். அவர் பெண்ணாக நடித்து எடுத்த புகைப்படத்தைக்கூட என்னிடம் தந்திருந்தார்.

காலச் சக்கரம் சுழன்றது.

அத்தானும் சிரேஷ்ட வகுப்பு சித்தியடைந்து விட்டு வேலை தேடிச் சுழன்றுகொண்டிருந்தார். எங்கெல்லாமோ சுற்றிவிட்டு இரண்டு வருடங்களுக்குப்பின் விதி அவரை என்னிடம் கொண்டுவந்து ஒப்படைத்தது. நான் படிப்பித்த பாடசாலைக்குப் பக்கத்தில் சுமார் இரண்டு மைல் தொலைவில் உள்ள 'விநாயகர்' வித்தியாசாலையில் உதவி ஆங்கில ஆசிரியராக கடமையாற்ற வந்தார். அப்போது தான் நாமிருபேரும் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி புகுமுகப் பரீட்சைக்குத் தயார் செய்தோம். அந்த நாட்களை என்னால் மறக்கவே முடியாது.

களில் கைகோர்த்து, நாளும் பொழுதும் உறவாடி, வானும் மதியும் போல் நிலவாடி நிம்மதியாக இருந்த அந்த நிகழ்ச்சிகள் என்னைவிட்டு நீங்குமா? அந் நாட்களில் ஒரு நாள் இரவு அத்தானின் நாடகம் பார்க்கப்போயிருந்தேன். அவர் நடிப்பில் பெண்களைவிட பிரமாதமாக நடித்தார். நாயகியாக நடித்த அவர், நாணத்தால் முகத்தை மறைத்தும், பாசத்தால் பாடியாடியும் எவ்வளவு இயற்கையாக நடித்தார். அவரின் தங்கையும் நாடகம் பார்க்க வந்திருந்தாள். அவளின் பிடிவாதத்தை மீற முடியாமல் அன்றிரவை அவள் வீட்டில் கழிக்க வேண்டியதாயிற்று. அன்றுதான் என் வாழ்வுக்கு அத்தான் விளக்கேற்றி வைத்த நாள். முழுநிலா மோகனப் புன்னகையோடு மாமரத்தின் ஊடாக மாந்த விர்சனை முத்தமிட்டு வந்து என்னைப்பார்த்துச் சிரித்தது. உறங்காது உருண்டு கொண்டிருந்த என்னை வெளியே கிடந்த அத்தான் அருகு வந்து கரங்களைப்பற்றி அழைத்தார். அவர் தங்கை பக்கத்தில் நித்திரா தேவியின் மடியில் புரண்டு கொண்டிருந்தாள். வெளியில் மாந்தளிர் ஊடே வந்த நிலாவொளியில் அத்தானின் மார்பிலே கண்ணீர் கடலில் குளித்துக்கொண்டிருந்தேன். பொழுதுவிடிந்தால் பயிற்சிக் கல்லூரிக்கு போய் விடவேண்டும். அதன்பின்னர், அத்தானின் அமுதமொழியை- அன்புப் பார்வையை - ஆனந்தச் சிரிப்பை என்னால் கேட்கவே முடியாது.

அத்தான் எனக்குச் செய்த நன்மைகளைவிட நான் அவருக்குத் தீமைகள் தான் நிறையச் செய்திருக்கிறேன். என் பொருட்டு - என்னை அவலையான நிலையில் விடக்கூடாதென்பதற்காக, அவர் பட்ட துன்பங்கள்- உற்ற அவமானங்கள் - செய்த தியாகங்கள் ... அப்பப்பா ...? எப்படிச் சொல்வது? எதைச் சொல்வது? கடைசியாக ஆசிரியர் வேலையிலிருந்து நீக்கப் போவதாக, மனேச்சர் கடிதம் அனுப்பியதும் என்னிடம் வந்து சொல்லி அழுதார். நான் கோவென கதறி விட்டேன். அவருக்காக நான் எந்தத் தியாகத்தையும் செய்யக்காத்திருந்தேன். ஆனால் அவரை மட்டும் இழக்கவோ— தியாகம் செய்யவோ என்னால் முடியவில்லை. என்னால் அவருக்கு ஒவ்வொரு நிமிடமும் தீராத தொல்லைகள் என்று தெரிந்தது. ஆனால் அவரின் எல்லையைத் தாண்டி என்னால் எட்டிப் போக முடியவில்லை. இந்த வேதனைகளாலும், சோதனைகளாலும் தான் எமது காதல் வெற்றி நடைபோட்டது என்று சொல்லவேண்டும். துன்பமும், துயரமும் வரும்போதெல்லாம் நாம் முன்னரிலும் ஒன்றி, இணைந்து, கலந்துவிடுவோம்.

—"மதுமலர்"—

## ஞாயிறு கதை மலர்

அத்தான் மடியில் படுத்திருந்து, லட்டும், வடையும் அவர் கையாலே சாப்பிட்ட அந்த நாட்கள் மீண்டும் வருமா? சாவகச்சேரி சந்தையிலே மாம்பழமும், பலாப்பழமும் விதம்விதமாக வாங்கி வந்து, கனை கனையாக வெட்டி எனக்குத் தர நான் கொட்டிக் கொட்டித் தின்று சுவைத்த அந்தநாட்களை என்னால் மறக்க முடியுமா? நாடகமேடையில் போலவே என் மனமேடையிலும், அவர் கனிய காதல் மொழிபேசி, கேலி செய்து, இனிய சினிமாப் பாடல்களை பாடி, கடற்கரையோரங்களில் மாலை வேளை இப்படியானவேளைகளில் "என் இதய நீலா, எம் இலட்சியம் இடையூறுகள் நிலறந்தன. எமக்கு எதனையும் தாங்குமிதயம் வேண்டும்" என்று ஆறுதலும் தேறுதலும் கூறுவார்.

பெற்ற தாயை, பேணி வளர்த்த தந்தையை என் பொருட்டுத் துறந்து எனக்கு வாழ்வு தந்தார். அவர் தங்கை வாழ்க்கைப்பாதையில் அடிஎடுத்து வைக்க -டருவத்தில் வாசலில் தயாராகஇருந்தும் என் பணத்தால் அவருக்கு அவர் உடுப்புத்தரும் ஏற்படும் அவமானத்தைக்கூட பார்க்காமல் என் கழுத்தில்

(8ம் பக்கம் பார்க்க)





தன் குடும்பத்திற்கு சமைத்து, இடித்தல், அரைத்தல் போன்ற கடினமான வேலைகள் செய்து, ஆடைகள் துவைத்து, பிள்ளைகளையும் வளர்த்தெடுத்து, அல்லும் பகலும் உழைக்கும் அவளுக்கு குன்றாத பெலனும் சக்தியும் அவசியம். ஆகவே அவளுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவளை அனுதினமும் சளைக்கா சக்தியுடன் சுகமாக இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனல் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




மாமைட்

78

## ஞாயிறு கதை மலர்

## வைகாசி ரோஜா

# மூன்று உண்மைகள்

மூலம்:
லியோ டால்ஸ்டாய்

தமிழாக்கம்:
திருமதி அழகமுத்து மயில்வாகனம்

— 6 —

நாளுக்கு நாள், கிழமைக்குக் கிழமையாய், வருஷங் கடந்துபோய்க்கொண்டு இருந்தது. மைக்கேல் சைமனுடன் இருந்து அவனுக்கு வேலை செய்தான். சைமனுடைய வேலையாளைப்போல, வேறெவரும் உறுதியானதும் இறுக்கமானதுமான சப்பாத்துகளைத் தைக்கவில்லை. ஆகையால் எல்லோரும் சைமனிடமே சப்பாத்துகளுக்கு வந்தார்கள், அவன் நாளடைவில் பணக்காரனானான்.

குளிர்காலம் வந்தபோது ஒருநாள் சைமனும் மைக்கேலும் வேலை செய்துகொண்டு இருந்தார்கள். மூன்றுகுதிரைகள் பூட்டிய வண்டி ஒன்று வெளியே வந்து நின்றது. அவ்வண்டியில் இருந்த வேலைக்காரன் குதித்து இறங்கி வண்டிக் கதவைத் திறந்துவிட்டான். மிருதுமயிரினால் செய்யப்பட்ட கோட் ஒன்றை அணிந்த குலமகன் ஒருவன் இறங்கிச் சைமன் வீட்டை நோக்கிச் சென்றான். மற்றவன் பாய்ந்தெழுந்து கதவை நன்றாகத் திறந்து விட்டான்.

உள்ளே வருவதற்காக அந்தக் குலமகன் தலையைக் குனிய வேண்டியதாயிற்று. உள்ளே வந்து நிமிர்ந்து நிற்கும்போது, அவனுடைய தலை கூரையைத் தொட்டது. அறையின் அரைப் பகுதியை அவன் ஆகிருதி நிரப்பிக்கொண்டு இருந்தது.

சைமன் எழுந்து உள்ளே வந்த மனிதனைப் பேராச்சரியத்துடன் பார்த்தான். அவனைப் போன்ற மனிதனைச் சைமன் ஒருபோதும் இதுவரையிற் பார்த்ததில்லை. சைமனும் மைக்கேலும் மெலிந்த மனிதர், ஆனால் இந்த மனிதன் வேறோர் உலகத்தில் இருந்துவந்தவன் போற்காணப்பட்டான். முகம் சிவப்பாகவும், உடல் பெரிதாகவும் கொழுப்பாகவுமிருந்தது. கழுத்து மிகவும் தடிப்பாக இருந்தது. இரும்பினாற்செய்யப்பெற்ற ஒரு மனிதன் போற் தோற்றமளித்தான்.

அவன் உரத்துச் சுவாசித்துக் கொண்டு, தன் மிருது மயிர்க் கோட்டைக் கழற்றிவிட்டு இருந்தான். 'உங்களில் யார் முதன்மையான சப்பாத்துச் செய்யக்கூடியவன்?' என்று கேட்டான்.

'நான் தான் பிரபு' என்று சொல்லிக் கொண்டு சைமன் முன்னே வந்தான்.

பின்னர் அந்த மனிதன் தன் வேலைக்காரனைச் சத்தமிட்டு அழைத்து, 'ஏ வெட்கா, தோலை இங்கே கொண்டுவா', என்றான்.

வேலைக்காரன் ஒரு பாசலுடன் உள்ளே ஓடிவந்தான். எசமான் அதைஎடுத்து மேசைமேல் வைத்தான்.

'அதை அவிழ்', என்றான் குலமகன் வேலைக்காரனை நோக்கி. வேலைக்காரன் அவிழ்த்தான், குலமகன் தோலை சைமனுக்குக் காட்டினான்.

'இங்கே பார் சப்பாத்துக்காரா! இந்தத் தோலை நன்றாகப் பார்!'

'ஆம் பிரபு, பார்க்கிறேன்.'

'உனக்கு இது எப்படிப்பட்ட தோல் என்று தெரியுமா?'

சைமன் தோலைத் தொட்டுப் பார்த்துவிட்டு, 'இது மிகவும் நல்ல தோல்', என்றான்.

'நல்லதுதான் மடையா, நீ உன் சீவியத்தில் இப்படிப்பட்ட தோலைக் கண்டிருக்கமாட்டாய். இது ஜேர்மனியில் இருந்து தருவிக்கப்பட்டது, இதன் விலை இருபது ரூபிள்.'

இவ்வாறு வந்த மனிதன் பேசியதைக் கேட்ட சைமன் பயந்து, 'ஆமாம் நான் எங்கே இப்படித் தோலைக் காணப் போகிறேன்?' என்றான்.

'அது உண்மை! இதிலே எனக்குச் சப்பாத்துத் தைத்துக்கொடுக்க உன்னால் முடியுமா?'

'ஆம் பிரபு, என்னால் முடியும்.'

இந்தப் பதிலைக் கேட்ட அந்தக் குலமகன் சைமனைப் பார்த்து 'உன்னால் முடியுமா?' என்று சத்தமிட்டான். பின்னர், 'சரி, யாருக்கு அவற்றைச் செய்யப்போகிறாய் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். தோல் எவ்வளவு விசேஷமானது என்பதையும் அறிந்துகொள். ஒரு வருஷத்திற்குப் பாவிக்கக்கூடிய சப்பாத்துக்கள் நீ செய்யவேண்டும். அவை உருவம் மாறவோ, தையல் வெடிக்கவோ கூடாது. உன்னால் முடியுமானால் தோலை எடுத்து வெட்டு. முடியாவிட்டால், முடியாது என்றுசொல். உருவம் மாறியோ, தையல் வெடித்தோ இருக்குமாயின், உன்னைச் சிறையில் வைப்பேன் என்று இப்பொழுதே சொல்லி வைக்கிறேன். ஒரு வருஷம் முடியும் வரை, நிலைமை மாறமடையாது இருந்தால் உன் வேலைக்கு நான் பத்துரூபிள் தருவேன்.'

சைமன் திகில் அடைந்தவனாய் ஒன்றும் சொல்ல முடியாதவனாய் இருந்தான். அவன் மைக்கேலைப் பார்த்து அவன் கையைத் தொட்டான்.

'வேலையை ஒப்புக்கொள்ளலாமா?' என அமைதியான குரலிற் கேட்டான்.

மைக்கேல் ஆம் என்றதற்கு அடையாளமாக ஒரு சைகை காட்டினான்.

சைமன் வேலையை ஒப்புக்கொண்டான்.

குலமகன் தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு தனது இடது காலில் இருக்கும் சப்பாத்தைக் கழற்றும்படி கட்டளையிட்டான்.

'என் காலை அளந்து எடு', என்றான் சைமனிடம்.

சைமன் பதினேழு அங்குல நீளமுள்ள ஒரு கடதாசி அளவைத் தைத்தான். அதை அழுத்தமாக்கி விட்டு முழந்தாளில் இருந்து தன் கைகள் சுத்தமாக இருக்கின்றனவா என்று அறிந்தபின் அளக்கத் தொடங்கினான். அவன் காலின் நீளத்தையும், கால்விரல்களின் அளவுகளையும் எடுத்த பின், காலின் சுற்றளவை அளக்கத் தொடங்கினான். ஆனால் கடதாசி நீளம் போதவில்லை. கால், ஒரு படலைக்கு உபயோகிக்கும் மரக்குற்றி மாதிரித் தடிப்பாக இருந்தது.

'காலைச் சுற்றி மிக இறுக்கமாகத் தைக்கக்கூடாது என்பது ஞாபகத்தில் இருக்கட்டும்' என்று வந்த மனிதன் இரைந்தான்.

சைமன் முந்திய அளவுடனே இன்னோர் துண்டு கடதாசி வைத்துத் தைத்தான். குலமகன் தன் கால் விரல்களை அசைத்துக்கொண்டு அறையில் உள்ளவர்களைச் சுற்றிப்பார்த்தான். அப்பொழுது மைக்கேல் அங்கிருப்பதைக் கவனித்தான்.

'அது யார்?' என்று அவன் சைமனைக் கேட்டான்.

'அவன் என் பணியாள், சப்பாத்துக்கள் தைப்பான்' என்றான். வந்தவன் மைக்கேலைப் பார்த்து, 'கவனம், ஒரு வருஷத்திற்கு உறுதியாக இருக்கக் கூடியதாகத் தைக்கவேண்டும்' என்று சொன்னான்.

சைமன் மைக்கேலைப் பார்த்தான் ஆனால் அவன் வந்த மனிதனைப்பார்க்காது அவனுக்குப் பின்னால் இருந்த மூலையைப் பார்த்தான். அங்கே யாரோ இருப்பது போல நடந்துகொண்டான், மைக்கேல் அங்கே பார்த்துப் புன்முறுவலித்தான், அவனுடைய முகம் பிரபையடைந்தது.

குலமகன் அவனை நோக்கிக் கோபத்துடன், 'மடையா எதற்காகச் சிரிக்கிறாய்? எனக்குத் தேவையான நேரம் சப்பாத்துக்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும்' என்று கடுமையாக மொழிந்தான்.

"உனக்குத் தேவையான நேரம் அவை ஆயத்தமாக இருக்கும்" என்றான் மைக்கேல்.

பின்னர் அந்தக் குலமகன் தன் சப்பாத்துக்களை அணிந்துகொண்டு, கோட்டையும் போட்டுத் தோள்களின்மேல் இழுத்துவிட்டுக்கொண்டு கதவடிக்குச் சென்றான்.

அவன் தலையைக் குனிந்து செல்லாதபடியாற் கதவிலே தலையை மோதிக்கொண்டான். தலையைத் தேய்த்துக்கொண்டு பயங்கரமாக ஆணையிட்டுக் கொண்டு சென்றான். பின்னர் வண்டியிலேறிச் சென்று விட்டான்.

அவன் சென்றபின், சைமன், எவ்வளவு உறுதியான அழகான மனிதன்! அவன் கதவு நிலையையே தட்டிவீழ்த்தப் பார்த்தான், மரம் அவனுக்கு நோ உண்டாக்கவில்லை; என்று வந்த மனிதனைப் பற்றிய தன் அபிப்பிராயங்களைத் தெரிவித்தான்.

நல்ல உணவும் பணமும் இருப்பதால் அவன் நல்ல பலசாலியாக இருக்கிறான்; அவனைப் போன்ற ஒரு கற்பாறையை மரணம்கூடத் தொட முடியாது" என்று மற்றவனுக்கு கூறினான்.

—தொடரும்

# விதியின் கொடுமை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மாங்கல்யம் சூட்டினர். அவரை என் அத்தான் என்று சொல்வதைவிட என் தெய்வம் என்று சொல்வதே பொருந்தும். அந்தத் தெய்வம் என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டதைத் தவிர கடிந்து ஒருவார்த்தை பேசியதை நான் கண்டதில்லை.

திருமண நாளன்று கொட்டுமேளம் கொட்டவில்லை. கொடிகளும் கோலங்களும் கிட்டவில்லை. உற்றார், உறவினர் வந்து, மணபந்தலிட்டு, மணவறை வைத்து, மாவிலை தோரணம் கட்டி, மணவாழ்த்துப் பாடி, சுப சோபனங்கள் கூறவில்லை. அவர் பெற்றோரின் பொற்கோவிலைத்தாண்டி என்னிடம் வர மாலை நாலுமணியாயிற்று. ஏதோ பெயருக்கு அலங்காரம் செய்துகொண்டு அக்கம் பக்கத்து ஆட்களுடன் ஆலயம் சென்று, ஆண்டவன் பாதமலர் பூங்கழலிணையடியில் பொலிந்த புன்னகையோடு என் கழுத்தில் பொற்றாலி பூட்டினர். அன்றுதான் நான் பேரின்பம் பெற்ற நாள்! என் இலட்சியம் கைகூடிய இன்ப நாள்! பெற்றாரும் உற்றாரும் மற்றாரும் மகிழ, மனம் விரும்பிய, நிறைந்த மணவாளன் என் மலர்க்கரம் பற்ற, நான் பார்ப்போர் பொறாமைப்பட, கோல மயில் போல, கொலு வைத்த சிலைபோல ராஜபவனி வந்தநாள்.

அப்போது ஆறுமணிச்சட்டம் அமுலிலிருந்தது. தேன் நிலவுக்கோ மாடிவீட்டின் வசந்தத்துக்கோ போகமுடியவில்லை, அரசியலார் அவசரகாலச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருந்தனர். பொல்லாத இந்த நாளில் தான் என் கழுத்தில் பொற்றாலி பூணவேண்டுமென்று என் தலையில் எழுதியிருந்திருக்கிறது. தித்திக்கும் தேன் நிலவு - தெவிட்டாத இன்பத் தீஞ்சுவை - மூத்திக்கும் மேலான அவர் முத்தங்கள் - மொழியிலே அடங்காத மோகனப் புன்னகை. இதையெல்லாம் அனுபவிக்க என் முதலிரவை எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தேன். இன்னும் அரை மணி நேரம் இருந்தது. என் கையால் அத்தானுக்கு உணவு படைத்து, அவர் இட்ட எச்சிலை இன்பமாக உண்டு விட்டு படுக்கையைத் தயார் செய்து விட்டு, பாலும், பழமும் அத்தானுக்குக் கொடுத்து விட்டுப் படுக்கைக்குப் போகும் போது தான் உணர்ந்தேன் நான் அவருடன் அன்றிரவைக் கழிக்க முடியாமலிருந்ததை. அன்றிரவை மட்டுமல்ல, தொடர்ந்து மூன்றிரவுகளை அத்தானுடன் கழிக்கமுடியாத பாவியாக ஒரு மூலையில் கோடு இட்ட கோணத்தில் சுருண்டு படுத்திருந்தேன். நான் விரும்பிய கணவன் கிடைத்தும் அவருடன் மோகனம் நிறைந்த 'முதலிரவை'க் கழிக்க முடியாத துர்ப்பாக்கியவதி என்னைத் தவிரவேறுயாரும் இருக்க முடியாது. என் செய்வது நான் கொடுத்து வைக்காதவள்.

அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்ததும், எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் தந்தி கொடுத்தார்கள். லீவு ரத்து செய்யப்பட்டதாகவும், உடனடியாக வேலைக்குத் திரும்பும்படியும் அறிவித்தார்கள். அந்த அருமையான ஆசிரியர் வேலையைவிட்டு அத்தானும் ஏன் தான் அரசாங்கமாஸ்டராகச் சேர்ந்தாரோ, அவருக்கும் தந்தி வந்தது. வந்த தந்தி என் உயிரைக் கொண்டுபோயிருக்கலாம். நான் உயிரினும் மேலாகமதித்த என் அத்தானை, என் இதயத்தில் வாழ்ந்துகொண்டிருந்த இன்பஎண்ணங்களின் இறைவனை அல்லவா கொண்டுபோயிற்று.

அவர் கொழும்புக்கு வந்து. ஆறுமாதங்களாயின. அதில் ஒருநாளாவது அவர் என்னிடம் வந்ததில்லை. அவர் போக்கிலும், கடிதம் எழுதும் முறையிலும் மாறுதல்கள் காணப்பட்டன. என் மனம் இரத்தம் கசிந்தது. கண்கள் கடலாகின. கல்லூரியில் மாணவிகளுக்கு சரியாக பாடம் சொல்லிக் கொடுக்கக்கூட முடியவில்லை. அழுது, அழுது என் கண்களும் சிவந்து, முகமும் பருத்துவிட்டது. உடல் மட்டும் வாடி வதங்கி என் வாட்டத்தை பிறருக்கு காட்டிக் கொண்டிருந்தது.

திடீரென ஒருநாள் "அத்தான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்" என்று அவசரத் தந்தி ஒன்று எனது பாடசாலை விலாசத்துக்கே வந்தது. அதைப் படித்துவிட்டு என்னால் நிற்கவோ இருக்கவோ முடியவில்லை. மனம் பதறியது. உடல் நடுங்கியது. பாடசாலையில் லீவோ - வீட்டில் ஒரு வார்த்தையோ யாரிடமும் சொல்லவில்லை. தந்தி கண்டவுடன் யாழ்தேவி ஏறினேன். இரவு பத்துமணிக்கு கொழும்பு கோட்டைக்குவந்தேன். 'டக்சி' ஒன்றை அமர்த்திக் கொண்டு கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு காற்றாய்ப் பறந்தேன். மனம் பட்ட பாடு. கண்கள் அவரைக்காண துடித்த துடிப்பு. எண்ணத்தில் ஏற்பட்ட தவிப்பு... எப்படியோ வாட்நம்பரை அறிந்துகொண்டு அவர் அருகே விரைந்துசென்றேன். "அத்தான்" என்று கதறிக் கொண்டே அவர் கட்டிலில் சாய்ந்தேன். மறுகணம் திடுக்குற்றேன். ஒருவேளை மனவேதனையில் இடம் மாறிவிட்டதா? அல்லது வாட் நம்பரை மறந்து பெண்கள் கட்டிலுக்கு வந்துவிட்டேனா? என்னால் எதுவுமே முடிவுசெய்ய முடியவில்லை. தலை சுற்றியது. மூடியிருந்த கம்பளத்தை விலக்கிவிட்டு, அந்தக் கட்டிலில் ஒருபெண் மெல்லஎழுந்து இருந்தாள். முழுமதி போன்ற அவள் முகம் கசந்தக், கருவிழிகள், கன்னியர் மயங்கும் கட்டுடல், கலையாத கருமைபடிந்த கேசங்கள் எல்லாம் மங்கி, மறைந்து ஒரு மங்கையின் உருவம் மட்டும்தான் எனக்குத் தெரிந்தது. இப்படியான புதுமையான மந்திர விளையாடல்களை நாடகங்களிலும், கதைகளிலும், சினிமாவிலும்தான் பார்த்திருக்கிறேன் — படித்திருக்கிறேன். அந்த பரிதாபம் என் வாழ்வில் நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

என் இதயம் நின்றுவிடும் போல இருந்தது. அதிலேநான் செத்துவிடக் கூடாதா என்று கூட எண்ணினேன். எல்லாரையும் துறந்து, பகைத்து, ஏங்கி எதிர்பார்த்துக்காத்திருந்து அவருக்காக வாழ்ந்த என் உள்ளம் தெரியாதவூரார் சிரிக்கப் போகிறார்கள் என்பதை எண்ணி என் மனம் இரத்தக்கண்ணீர் வடித்தது. எந்தக்கடவுள் என் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உருவத்தைத் தந்தாரோ அதே உருவத்தை பெண்ணுருமாற்றிவிட்டார். டாக்டரும நேர்சும் வருத்தம் தெரிவித்தார்கள். பொம்மைகளை வைத்து விளையாடும் குழந்தைபோல, மனித உருவங்களை வைத்து விந்தை விளையாடல் புரியும் மகத்தான கடவுளின் சக்தியைப் பற்றி எடுத்துக் கூறி ஆறுதல்சொன்னார்கள். எந்தக் கடவுளை இருகைகூப்பி வணங்கி, அத்தானுடன் ஆலயம் போய் தியானித்து, திருவிளக்கேற்றி, திருப்பாடல்பாடி, துதித்துக் கொண்டாடினேனோ அதே கடவுளை சபித்தேன்! சாபமிட்டேன்!

(யாவும் கற்பனை)

# கலை அரங்கம்

## ‘சிலம்புச் செல்வி’

நிகழ்ச்சி 6-00 மணிக்குத் தொடங்கும் என்றுதான் அறிவித்திருந்தார்கள். தெரியாதா எங்கள் ஆட்கள் சங்கதி மொஸ்கோ தலம் சென்ருல் கிரம்ளினுக்கு ஒரு கும்பிடு. எப்படியும் ஏழு மணியாகும் என்று எண்ணிக் கொண்டே நகரமண்டபம் நோக்கிநடந்தபோது வந்தது தான் வந்தோமே சுப்பிரமணியம் பூங்காவிலும் சற்று வேளை அமர்ந்திருந்துவிட்டுப் போகலாம்என்றுகால்கள் அந்தப்பக்கம் இழுக்கவே ஆங்கு சென்று பெஞ்சின் மீது உட்கார்ந்து கையோடு கொண்டுபோயிருந்த அன்றைய சிலம்பொலி நாடகத்தின் நிகழ்ச்சி விபர வெளியீட்டைப் புரட்டிப்பார்த்துக்கொண்டிருந்தேன். சிலு சிலு வென்று வீசிய கடற்காற்று ஒரோர் சமயம் சூறைக் காற்ருகி பொல பொல வென்று மணலும் தூசுமாக தலையில் அள்ளிக் கொட்டி விட்டுச் சென்றது. விசாக சந்திரன் நிலவைப் பெய்து கொண்டிருந்தது. பூந்தோட்ட ஒலிபெருக்கி சுகத சங்கீதம் பொழிந்து கானவெள்ளம் பரப்பியது... சனசந்தடி மெது மெதுவாக அடங்கிப் பூந்தோட்டத்தில் நிசப்தம் குடி கொண்டது...

“ஐயா ஐயா அதோ உங்கள் ஊர் ரசிகபெருமக்கள் கால மணி நேரமாக இரைந்து சத்தம் போட்டுக்கொண்டிருக்கிருர்கள். நீங்கள் தான் வாசலில் குறுக்கே நிற்கிறீர்களே. தயவுசெய்து அவர்களிடம் ஒருவார்த்தை சொல்லுங்களேன்” என்று இணையரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையளாய் தலைவிரிகோலமாக ஒரு பெண் என்முன் தோன்றுகிருள். அவளைப்பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது. நான் ஓடோடியும் சென்று சபைமுன்னே நின்று, “தேரா மன்னர்களே பனைக்கொடி இறங்கிவிட்டதாம். ஒரே கொந்தளிப்பும் குழப்பமுமாகிவிட்டதாம். நீதிதப்பிவிட்டதாம். தர்மம் தாழ்ந்துவிட்டதாம். குலைந்த கூந்தலும் சிந்திய கண்ணீருமாய் உங்களிடம் வழக்குரைக்க ஒருத்தி வந்து கொண்டிருக்கிருள். தயவு செய்து அமைதியாய் இருங்கள்”என்று கேட்டுக் கொள்கிறேன்.

சபையின் ஆரவாரம் அடங்கி நிசப்தம் நிலவுகிறது.

தொடர்ந்து பனைமரமே பனைமரமே ஏன் வளர்ந்தாய் பனைமரமே என்ற பாட்டு எழுகிறது. எங்கிருந்தோ மலர்களின் இயற்கை நறுமணம் சிலம்பொலியுடன் கூட காற்றில் மிதந்து வருகிறது. ‘கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய மாமலர் நெடுங்கண்மாதவி வீணையும் கையுமாய் மெல்லென வருகிருள். குரவைக்கூத்து நடைபெறுகிறது. மாதவி மறைவிலிருந்து வீணை வாசித்து மகிழ்கிருள்...

இப்படியாக எவ்வளவு நேரமாயிற்ருே பூந்தோட்டக் காவல்காரா பூப்பறிக்க இதனை நானா என்று ஒலி பெருக்கி அலறியபோதுதான் நான் கண்விழித்து என்நிலையை உணர்கிறேன். பூந்தோட்டக் காவல்காரன் கேட்டைப் பூட்டிக்கொண்டு போயே போய் விட்டான். நகரமண்டபத்தில் நாடகம் முடிந்து கார்கள் ஒன்றன் பின் ஒன்ருய் விர்ரென்று வெளியேறிக் கொண்டிருக்கின்றன.

நிலத்தில் வீழ்ந்து கிடந்த சிலம்பொலிவெளியீட்டைகையிலெடுத்துக் கொண்டு யார் கண்ணிலும் படாமல் எல் கலைகளைத் துடைத்துக் கொண்டு எப்படியோ வீடு வந்து சேர்ந்தேன். கடிகாரம் பன்னிரண்டு மணியைக் காட்டியது.

முதல்தினம் நிகழ்ச்சி இப்படியாகிவிடவே இரண்டாம்நாள் முன்னெச்சரிக்கையுடன் டணர் என்று ஆறுமணி அடிக்க நேரே நகர மண்டப வாசலில் போய்க் குதித்தேன். சரியாக ஆறு முப்பது மணிக்கு படீர் என்று திரைவிலகி ஆனந்தமான சிவபார்வதி தரிசனம் கிடைத்தது. அதன்பின் இரண்டாம் காட்சி, மூன்ரும் காட்சி, நான்காம் காட்சி என்று கோவலன் கண்ணகி கல்யாணம் முதலாக அரசியல் பிழைத்த மதுரை மாநகருக்கு அறமே கூற்ருகி தீக்கிரையானது வரை மொத்தம் 14 காட்சிகளில் நெஞ்சைஅள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தை இரண்டரை மணி நேரத்தில் சுனகச்சிதமாக நடித்துக்காண்பித்துவிட்டார்கள் கொழும்பிலிருந்து வந்திருந்த சைவ மங்கையர் கழக மாணவிகள்.

சிலப்பதிகார காவியத்தைப் போலவே முத்தமிழும் பொங்கிப் பிரவகித்த இச்சிறு மகளிரின் ஆடலும் பாடலும் அபிநயமும் இரு தினங்களிலும் நகரமண்டபத்தில்கூடியபெருங் கூட்டத்தினரைக் கொள்ளை கொண்டு விட்டதென்ருல் அது புகழுரையேஅல்ல.

நடிப்பு, பேச்சு, அபிநயம், நிருத்தம், ஜதி, லளிதம், லாவண்யம், துடிப்பு, கொடிப்பு, உயிர்ப்பு, நயனசுகம், நளின சுகம் என்பன போன்ற கலை அம்சங்கள்முத்துமாலையாகவும் வைரவைடூரியமாகவும்,கோமேதம், புஷ்பராகம் பதித்த ஆபரணங்களாகவும் ஒவ்வொரு சிறுமியரிடத்தும் கதிர்பரப்பி நின்றன.

நவநவமான வர்ண ஜாலங்களை அள்ளிவீசிய சித்திரக் கிழியெனத் திகழ்ந்த இப் பாவையரை நாளைக்கு வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ளப்போகும் பாக்கியவான்கள் யாரோ? அப்பொழுது ஒரு நாள் இவர்கள் அடிசிற்கினிய அன்பு மனைவியராகி ஒரு பொரியலும், ஒரு வறுவலும் ஒரு அவியலுமாக அறுசுவை அமுது படைக்க, இவர்களின் கணவன், “கண்ணே, அன்றை நற் தமிழ் கூத்து முறையினுல் நவரசம் ததும்பஒருமுகூர்த்தம் ஆடிக்காட்டமாட்டாயா?” என்று இவர்கள் முன் மண்டியிட்டு நிற்கப்போகின்ருன் என்பதை பெற்ருேர்கள் மனம் குளிர (ஆண்களின் பெற்ருேர் அல்ல) இப்பொழுதே சொல்லிவைக்கின்றேன்.

“இக்குழந்தைகளுக்கெல்லாம் திருஷ்டி பட்டுவிடாமலிருக்க வேண்டும். அவர்களுக்கு நீடித்த ஆயுளையும் ஆரோக்கியத்தையும் இறைவன் அருள்வானக” என்று இளங்கோ வடிகள் காவிரியை வாழ்த்தியதுபோல மனங்குளிர ஆசி கூறினுர் செனட்டர் சு. நடேசன்.

இதனுலெல்லாம், சைவமங்கையர்ககரசியாக மேடையில் ஆரோகணித்து நின்றவித்தியாலயப் பிரின்ஸிபலுக்குத்தான் அன்று என்ன ஆனந்தம்! ஒரு சமயம் அவர் மேடையில் தோன்றிய போது ஒரு சற்றுப் பருத்து ஒரு சாண் உயர்ந்தே காணப்பட்டார். இன்னும் சற்று வேளை அவர் மேடையில் நின்றிருந்தாலோ மிருதங்கக்காரர் ஒரு தட்டிலும் எடுப்பிலும் ஒரு நாமிலும் தொம்மிலும் அவர் காலையும் கையையு கூட ஒரு நிமிஷம் பதம் பார்த்து ஒரு ததிகிண தோம் போட்டுக்கொண்டே அங்கிருந்து குதித்தோடச் செய்திருப்பார்.

மேலும் இந்நாடகத்தை இலங்கைஎழுத்தாளர் சங்கக்காரியதரிசி ‘தேவன்’ எழுதினுர் என்று அறிந்தபோது ஈழத்தில் நாடகக்கலை வளர்க்கும் இன்றைய பரம்பரையின் நாளைய மகோன்னதம் பற்றி எண்ணி பெருமகிழ்ச்சியுற்றவனுய் வீடு திரும்பிய எனக்கு அன்றிரவு நிம்மதியான உறக்கம்.

அந்த உறக்கத்திலே ஒரு கனவு. புகழ்பெற்ற தென்னிந்திய திரைப்பட நிறுவன முதல்வர் ஒருவர் என் பக்கத்தே அமர்ந்து நாடகம் பார்ப்பதுபோலவும் நாடகம் முடிந்தவுடனே கலையரசு சொர்ணலிங்கம் ஐயாவின் வசிப்பிடத்தை விசாரித்துக் கொண்டு ஓடோடியும் போய் அவர் கையைப் பிடித்து நாடியைத்தடவுவதுபோலவும் ஒரு இனிய நினைவு. அப்பொழுது என் உதட்டில் தெளிந்த மென்முறுவலைப் பார்த்துவிட்ட என தாயானவள் மறுநாள் காலை “இரண்டு நாட்களாய் இரவிரவாய் எங்கே திரிகிருய்” என்று அதட்டியமட்டில் ஏற்பட்டதோ—ஒருதிகைப்பு.நான என்ன சொல்வேன்? பூசனிக்காய் சாம்பாருக்கு கதாப்பிரசங்கியார் கூறிய சமாதானம இங்கே சரிப்பட்டு வருமா?

த தோம் தி தோம்
தரிகிடதோம்
திரிகிடதோம்
தத்தரிகிடதோம்
தித்திரிகிடதோம்
தத்தரிகிட தித்திரிகிடதோம்
ததிகிணதோம் ததிகிணதோம்
ததிகிணதோம்......

“என்னடா மகன் நித்திரையிலே வாய் புசத்துகிருய்”

“ஒன்றுமில்லை அம்மா, அருணகிரி நாதர் இபபடியும் சுந்தரலங்காரத்தில் பாடியிருக்கிருரல்லோ”

“நாசமாய்ப் போச்சு போ. ஜவகர்லால் நேருவல்லோ மோசம்போய்விட்டாராம்”

“அதுக்கு இனி என்னனை செய்கிறது”

—“மேகலை”

பெண்டிரும் உண்டு கொல்?
பெண்டிரும் உண்டு கொல்? கொண்ட
கொழுநர் உறு
குறை தாங்குறா உம் பெண்டிரும் உண்டு
கொல்? பெண்டிரும் உண்டு
கொல்?

—சிலம்பு

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Drums of Africa
M. G. M. color)

# யாத்திரிகள்

(-6ம் பக்கத் தொடர்ச்சி)

காடிவாலா என்று பட்டமும் சூட்டிவிட்டார்கள். கந்தோரில் ஏ, தாடிஎப்படி, சுகமா?என்று கேட்டார்கள்: நானே நெடு நாளாக தாடியை அகற்றவேயல்லை அது தினமும் வளர்ந்து கொண்டே வந்தது. இராமாயணக் கதையில் ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகத்தின் போது பக்கத்தில் நின்ற லட்சுமணப்பெருமாளுக்கு ஏனே சிரிப்பு வந்து ஒருககால் மெல்லச் சிரித்துவிட்டாராம். அதைக் கவனித்தவர்கள் ஒவ்வொருவரும் அதற்கு ஒரு காரணம் கூறி ‘இதை எண்ணித்தான் அவர் சிரித்திருக்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனுல் உண்மை லட்சுமணனைக் கேட்டால் அல்லவோ தெரியும். முடிவில் அவனையே கேட்டுவிடுவதென்று எண்ணி ஒருவன் லட்சுமணனை அணுகி ‘பட்டாபிஷேக வேளையில எதற்கப்பா சிரித்தாய்? உனது சிரிப்பைப் பற்றி சபையில் ஒரே கொந்தளிப்பாக இருக்கிறதே’ என்ருன். அப்பொழுது லட்சுமணன் கூறிய பதில் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டது. “பதினன்கு ஆண்டுகள் இராப்பகலாக ஸ்ரீராமனைக்காத்து நின்ற போதெல்லாம் வாராதிருந்த நித்திரை இந்தவேளை பார்த்து வருகிறதே” என்று அப்பொழுது என் கண்களைத் தழுவிய தூக்கத்தை எண்ணிச் சிரித்தேன் என்ருனும்.

எனது தாடி பற்றியும் இப்படி ஏகப்பட்ட பரபரப்பு. ஏன் தாடி வளர்க்கிருய்? என்று புதிதாக ஒருவர் கேட்டால் “நீயே சொல்லு பார்க்கலாம்” என்று அவனிடமே அதற்கு ஒரு காரணம் கூறும்படி கேட்பேன். இப்படி ஒவ்வொருத்தனும் அவனவன் கற்பனைக்கு எட்டியமட்டில் ஏதாவது கதை சொல்வான. கேட்பதற்குவேடிக்கையாகவிருக்கும். சில நாட்களாக ஒரே பேச்சுக்கும், பரிகாசத்துக்கும் இடமாகியிருந்தது எனது தாடி.

அவள்: பின்னே, எதற்குத்தான் தாடிவைத்தீர்கள் சொல்லுங்களேன். நீங்கள் பிரமச்சாரி என்பதை விளமபரப்படுத்துவதற்கா அல்லது ......

தகப்பன்:- அதெல்லாம் ஒன்றும கிடையாது, தம்பி. நான் வளாத்தது அனுபவத் தாடி.

அவள்: அப்படியென்ருல்...?

தகபபன்: சொந்தத்திலே தாடி வளர்த்து நான் தெரிந்து கொண்டதுபற்றி உனக்குச்சில நிமிடம் சொல்ல முடிந்தல்லவா? ஓர் ஆறு மாதம வளாந்த தாடி எனக்கு எவ்வளவு விஷயங்களைக் கற்றுக்கொடுத்துவிட்டது....

அவள்: இவ்வளவு தானு? இதறகுத்தானு இப்படியெல்லாம அமர்க்களபபடுத்தினீர்கள்?

தகப்பன்: யாழ்ப்பாணத்தில் ஒரு புலவர் இருந்தார். அவரது தாடியைப்பார்த்தபோதெல்லாம எங்களுக்கு மனதுக்கு குதூகல மாயிருக்கும். மனத்தில ஒரு நல்ல எண்ணம் தோன்றும். பழைய காலத்தில் வால்மீகி, வேதவியாசர், காளிதாசர் போன்ற புலவர்கள் எப்படி கவியோகிகளாக ஆசார வாழ்க்கை நடத்தினுர்கள் எனபதை இந்தப் புலவரின் தாடி எங்களுக்குக்கூறியதாக உணர்ந்தோம.

அவள்: ஓகோ அப்படியென்ருல் நீங்கள வளர்த்தது ஆசாரத்தாடியோ?

(தொடரும்)

வரி விளம்பரம்

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50

வைத்தியர் பரிபூரணநாதர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்,

கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஒயில்
சகல சோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்:
GABRIELS, Chunnakam. 273

## அண்ணுமலை மன்றம் துயரம்

யாழ்ப்பாணம், சனி

தியாகச்சுடரும் உலகத் தலைவருமான பண்டித ஜவஹர்லால் நேருவின் மறைவு குறித்து உலக மக்களோடு அண்ணுமலை இசைத் தமிழ் மன்றமும் ஆருத்துயரிலாழ்ந்துள்ளது.

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு)

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) | ஜூப்பிட்டர் (குருணகலை) | தாஜ்மஹால் (கல்முனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்
நாணும் ஒரு பெண்
இந்திய ஜனுதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

# கச்சாய் கிராம சபை தேர்தல் முடிவுகள்

கொடிகாமம், சனி

நேற்று நடைபெற்ற கச்சாய் கிராமசபை தேர்தலில் முன்னாள் தலைவர் திரு. எஸ். கே. செல்லையா 78 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார். தற்போதைய தலைவர் திரு. ஏ. ரீ. சிதம்பரப்பிள்ளை மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்த 1-ம் வட்டாரத்தில் மூன்றாவது தடவையாக திரு. ஆ. கனகரத்தினம் 26 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார். இவ் வட்டாரத்தில் போட்டியிட்ட மற்றொரு அபேட்சகரான திரு. அ. குலசேகரத்திற்கு ஒரு ஒருவாக்கு மட்டும் கிடைத்தது.

பதினொரு அங்கத்தவர்களைக் கொண்ட கச்சாய் கிராமசபையில் முன்னாள் தலைவர் திரு. எஸ். கே. செல்லையாவின் ஆதரவாளர்கள் ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஏற்கனவே இருவர் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

**1-ம் வட்டாரம்**

| | |
|---|---|
| ஆறுமுகம் கனகரத்தினம் | 174 |
| கனகசபை தர்மலிங்கம் | 148 |
| அருணாசலம் குலசேகரம் | 1 |
| மேலதிகம் | 26 |
| பழுதானவை | 2 |

**2-ம் வட்டாரம்**

| | |
|---|---|
| வே. நடராசா | 89 |
| பி. அருளானந்தம் | 87 |
| அ. ஞானப்பிரகாசம் | 69 |
| மேலதிகம் | 2 |

**3-ம் வட்டாரம்**

| | |
|---|---|
| கணபதி செல்லத்துரை | 127 |
| அருணாசலம் வெற்றிவேலு | 103 |
| மேலதிகம் | 24 |
| பழுதானவை | 4 |

**4-ம் வட்டாரம்**

| | |
|---|---|
| பொன்னையா கணபதிப்பிள்ளை | 184 |
| செல்லையா சின்னப்பு | 102 |
| மேலதிகம் | 82 |
| பழுதானவை | 1 |

**6-ம் வட்டாரம்**

| | |
|---|---|
| வைத்திலிங்கம் கனகரத்தினம் | 118 |
| நல்லதம்பி சிதம்பரப்பிள்ளை | 83 |
| கணபதிப்பிள்ளை முத்தையா | 5 |
| மேலதிகம் | 35 |
| பழுதானவை | 6 |

**8-ம் வட்டாரம்**

| | |
|---|---|
| ஏ. ரீ. சிதம்பரப்பிள்ளை (தற்போதைய தலைவர்) | 108 |
| கந்தையா சுப்பிரமணியம் | 78 |
| மேலதிகம் | 30 |

**9-ம் வட்டாரம்**

| | |
|---|---|
| இ. செல்லையா | 77 |
| வ. முருகன் | 74 |
| ஆ. பொன்னையா | 22 |
| மேலதிகம் | 3 |
| பழுதானவை | 1 |

**10-ம் வட்டாரம்**

| | |
|---|---|
| எஸ். கே. செல்லையா (முன்னாள் தலைவர்) | 160 |
| வேலன் சின்னத்தம்பி | 82 |
| மேலதிகம் | 78 |
| பழுதானவை | 1 |

**11-ம் வட்டாரம்**

| | |
|---|---|
| முத்து தில்லையம்பலம் | 90 |
| கந்தர் கனகசபை | 85 |
| வல்லி கந்தையா | 45 |
| மேலதிகம் | 5 |
| பழுதானவை | 1 |


### நன்றி நவிலல்

கடந்த 21-5-64-ல் எங்கள் கனிஷ்ட புத்திரன் கிருஷ்ணராசா (கிராமசேவையாளர், பத்தமேனி - இடைக்காடு) அவர்களுக்கும், துன்னாலை வேலுப்பிள்ளை தவபாக்கியத்துக்கும் நடந்தேறிய திருமண வைபவத்தின்போது நேரில் சமுகம்தந்தும், வாழ்த்துச் செய்திகள், அன்பளிப்புகள் அனுப்பி வைத்தும் ஆசீர்வதித்த அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். அ. க. தருமலிங்கன் தம்பதிகள், ஆவரங்கால், புத்தூர். 474

### திகதி மாற்றம்

தொல்புரம் மேற்கு கலைவாணி சனசமூக நிலையம்.

தொல்புரம்மேற்கு கலைவாணி சனசமூக நிலைய கட்டட நிதிக்காக விற்பனவு செய்யப்பட்ட லொத்தர்சீட்டு 31-5-64 ஞாயிற்றுக்கிழமை அதிஷ்டம் பார்ப்பதாக இருந்தது. ஆனால் சில தவிர்க்கமுடியாத காரணத்தால் 28-6-64 ஞாயிற்றுக்கிழமை அதிஷ்டம் பார்ப்பதாக மாற்றப்பட்டுள்ளது என்பதை தயவாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்
நிலையத்தார். 382


## மேயர் தலைமையில் அனுதாபக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நவபாரதத்தின் சிற்பியாய், விடுதலை விரும்புவோரின் நம்பிக்கைச் சுடராய், ஒப்பற்ற உலகத் தலைவராய், கர்ம வீரராய் திகழ்ந்த சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஸ்ரீஜவஹர்லால் நேருவின் மறைவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 க்கு யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் யாழ். மாநகர முதல்வர் திரு. தா. ச. துரைராஜா தலைமையில் ஓர் அனுதாபக்கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் திருவாளர்கள்: சி. நாகராஜா, எம். எம். சுல்தான், எஸ். சிவபாதசுந்தரம், எம். பாலசுந்தரம், சி. கதிரவேற்பிள்ளை. முதலியார் சி. முத்துத்தம்பி, டாக்டர் ஈ.எம். வி. நாகநாதன் எம். பி. ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

## பாராட்டுக் கடிதங்கள்

உடுப்பிட்டி, சனி

ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்படும் பண்டிதர் தேர்வில் வடமராட்சி வாணி கலைக்கழகத்தின் சார்பில் எழுவருக்கு ஐவர் சித்தியெய்தியுள்ளமை குறித்து நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் பாராட்டுச் செய்திகள் வந்துகுவிந்தவண்ணம் இருக்கின்றதென்றும், இப்பரீட்சையில் தேர்ச்சிபெற்ற ஐவரும் தென்னிந்தியப் பல் கலைக்கழகங்களையும் குறிப்பாக சாந்திநிகேதனத்தையும் பார்வையிடுவதற்காக தென்னிந்திய சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன என்றும் கழக இயக்குனர் பண்டிதர் க. வீரகத்தி தெரிவித்தார்.

## தமிழ் பேசும் இளைஞரை ..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தப் பயிற்சிவகுப்புக்கள் முதலில் கோப்பாய்த் தொகுதியில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

வாலிப முன்னணியை வலுப்படுத்திக்கொண்டே வாலிப முன்னணியின் மகாநாடு நடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கடிதத்தின் கதி என்ன?

நல்லூர், ஞாயிறு

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு தமிழில் முகவரியிட்டு தமிழரசுக் கட்சிக் கிளை ஒன்று அனுப்பிவைத்த கடிதம் பல வாரங்களாகியும் அவருக்கு கிடைக்கவில்லையாம்.

பல வாரங்களுக்கு முன் தமிழரசுக் கட்சிக் கிளை ஒன்று முக்கிய விஷயமாக ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருந்தது. அந்தக் கடிதத்திற்கு உரிய காலத்தில் பதில் கிடைக்காததால் கிளை நிர்வாகிகள் திரு. செல்வநாயகத்திற்கு ஆங்கிலத்தில் பதில் முகவரியிட்டு கடிதமெழுதினர். அக்கடிதத்திற்கு திரு. செல்வநாயகம் அனுப்பியுள்ள பதிலில் முந்திய கடிதம் தமக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். தமிழில் விலாசமிடப்பட்ட கடிதத்தின் கதி என்னவாயிற்று என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. இதுபற்றி தபால் கந்தோர் மேலதிகாரியிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

## சேக்கிழார் மகாநாடு

நல்லூர், ஞாயிறு

தெல்லிப்பழை பன்னாலை ஞானவைரவர் ஆலயத்தில் பெரிய புராண விரிவுரைப் பூர்த்திவிழா ஜூன் மாதம் 12-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. அதற்கு அடுத்த தினம் சேக்கிழார் மகாநாட்டினை பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் கொண்டாடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சேக்கிழார் மகாநாட்டில் சைவப் பெரியார்களின் விரிவுரைகளும் மகேசுவர பூசையும், திருமுறைப் பாராயணங்களும் நடைபெறுவதுடன் நாதசுர இசை மன்னர் திரு. என். கே. பத்மநாதனுக்குக் கௌரவமளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யார் இவர்?

உடுப்பிட்டி, சனி

தொண்டமனாறு கடற்கரையில் இனந்தெரியாத 15 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவரின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டது. சாரம் உடுத்திருந்த இந்த நபரின் இப்பிரேதத்தைப் பொலிஸார் புலன் விசாரணை செய்தபோது உரிமைக்காரரென எவரும் வரவில்லை.

மரணவிசாரணை அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின்னர் தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டு பிரேதமும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை தலைமை ஆசிரியை திருமதி இராசம்மா கனகசபை பதவியிலிருந்து ஓய்வு பெறும்முகமாக அவருக்கு இன்று மாலை பாடசாலை மண்டபத்தில் பிரிவுபசாரவிழாவொன்று நல்லூர்ப் பாராளுமன்றப் பிரதிநிதி டாக்டர். ஈ. எம். வி. நாகநாதனின் தலைமையில் நடைபெறும்;

## ஜீப் மோதி சிறுவன் மரணம்

வவுனியா, சனி

மூன்றுமுறிப்பைச் சேர்ந்தவரும் பன்னிரண்டு வயதுமான பி. செல்லத்துரை என்னும் சிறுவன் வெசாக் தினம் சம்பந்தமாக நடைபெற்றுக் கொண்டிருந்த விழாவை புத்தகோயிலில் பார்ப்பதற்காக சென்று கொண்டிருக்கையில், புத்த கோயிலுக்கருகாமையில் ராணுவத்தினருடைய ஜீப் வண்டியினால் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானான் ஜீப் வண்டி [கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து வந்துகொண்டிருக்கையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

## "சித்திரத்தில் மாணவர்கள் அக்கறை காட்ட வேண்டும்"

### ஓவியக்கைப்பணி கண்காட்சி திறப்புவிழாவில் உதவி வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"பாடசாலைகளில் மாணவர்கள் சித்திரத்தில் அதிகம் விருப்பம் காட்டுவதில்லை. இக்கலையினால் பணம் சம்பாதிக்க முடியாது, உத்தியோகம் பெற முடியாதென நினைக்கிறார்கள். ஒரு மாணவன் சித்திரத்தில் சிறந்து விளங்கினால் அது மற்றப் பாடங்களுக்கும் உதவியாக இருக்கும். பூமிசாத்திரம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு சித்திரம் மிக மிக அவசியம். ஆதலால் மாணவர்கள் சித்திரத்தில் அக்கறை காட்டவேண்டும்".

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் புதன்கிழமை விடுமுறைகால ஓவியர் கழகத்தின் இரண்டாவது ஓவியக் கைப்பணி கண் காட்சியை நேற்று காலை வடமாகாண கல்வி உதவி வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் குத்துவிளக்கேற்றி திறந்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இரண்டு வருடங்களுக்கு முன்னால் நடைபெற்ற முதலாவது ஓவியக் கண்காட்சியை சித்திரக்கலையில் நல்ல அநுபவமுள்ள காலஞ்சென்ற திரு. கனகசபை திறந்துவைத்தார். ஆனால் இரண்டாவது கண்காட்சியை திறந்துவைக்கும்படி சித்திரத்தில் எதுவித அநுபவமுமில்லாத என்னை அழைத்தது பாடசாலைகளில் மட்டும் அக்கறை காட்டாது. சித்திரக்கலையிலும் ஆர்வம் காட்டும்படி என்னைத் தூண்டுவதற்காகவே என்று கருதுகிறேன்.

சித்திரத்தின் மூலம் பிள்ளைகள் சொல்லினால் விவரிக்கமுடியாத தமது மனதிலுள்ள காட்சிகளை வெளிப்படுத்துகிறார்கள். இக்கண்காட்சி நடத்துவதன்மூலம் சித்திரத்தை வரைந்தவர்கள் மட்டுமன்றி, அவற்றைப்பார்ப்பவர்களும் மகிழ்ச்சியடைகிறார்கள். ஆதலால் இக்கலையை வளர்க்க எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்.

இவ்வைபவத்திற்கு தலைமை வகித்த திரு. கந்தையா கூறியதாவது:-

விடுமுறைகால ஓவியர் கழகத்திலிருந்து பலர் ஓவியக் கண்காட்சியில் பங்கு பற்றி பரிசுகளும் பெற்றுள்ளார்கள. எங்கள் கழகம் இலங்கைக் கலைக் கல்லூரி புகுமுகப் பரீட்சைக்கு மாணவர்களை தகுதிப்படுத்தியனுப்பி வருகிறது. சென்ற ஆண்டு நான்கு முதல் பரிசுகள் இக்கழகத்திற்கு கிடைத்துள்ளது இக்கழகத்திலுள்ள ரி. சுவாம்பிள்ளை என்பவர் அரசினர் நுண்கலைக் கல்லூரியில் 5 வருட காலம் இந்தியச் சிற்பி மணியிடம் சிற்பக்கலையிற் தேர்ச்சிபெற்று வெளியேறியிருக்கிறார். இலங்கையில் இவர் ஒருவர் மட்டும்தான் சிற்பக்கலையில் தேர்ச்சி பெற்றிருப்பது, நமக்கு மிக மகிழ்ச்சியை அளிக்கிறது. இவர் 10 அடி உயரமுள்ள வெண்கல உருவச் சிலைகளை சிறந்த முறையில் வார்க்கக்கூடியவர். அத்துடன் சித்திரம் வரைவதிலும் சிறந்துவிளங்கிவருகிறார். நாளைய கலை மன்னர்களின் கைவண்ணங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

நமது கழகத்திலுள்ளவர்கள் வெவ்வேறு துறைகளில் சிறந்து விளங்குகிறார்கள். சேலைகளின் கரைகளுக்கு வர்ணம் பூசுவதில் ஒருவர் சிறந்துவிளங்குகிறார். பலர் சிறு சிறு சிற்பங்களையும் செய்துள்ளார்கள். எங்களை ஊக்குவித்து எங்கள் கழகத்திற்கு ஆதரவு தரும்படி. வடமாகாண கல்வி உதவி வித்தியாதிபதி, யாழ். மேயர் மற்றும் பொதுமக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

இருநூறு படங்களுக்குமேல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வர்ணம் பூசிய சேலைகளும், சிற்பங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இக் கண்காட்சி 31-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

## 21 கோரிக்கை . : .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கங்களின் இணைப்பு கமிட்டி தலைவருமான திரு. ஏ. வி. கந்தையா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

"இந்நாட்டில் அரசியல் பிரச்னைகள் பலஉள்ளதால் தொழிலாளர்கள் திக்கற்ற நிலையில் இருக்கின்றனர், காலத்துக்கு காலம் மாறும்அரசாங்கத்தைப் பற்றி எந்தநாட்டுத் தொழிலாளரும் அக்கறைப்பட வேண்டியதில்லை. தங்களின் நியாயமான உரிமைகளுக்காக போராடவேண்டியது தொழிலாளர்களின் கடமையாகும். தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாண மாவட்ட தொழிற் சங்கங்களின் இணைப்புக் கமிட்டி 21 கோரிக்கைகளையும் பெறுவதற்கு தொழிலாளரின் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றது. 21 கோரிக்கைகளை ஆதரிக்கும்பொருட்டு மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஜூன்மாதம் 5-ம் திகதி தியாகி கந்தசாமி தினமாதலால் அன்று யாழ். முற்றவெளி மைதானத்தில் கந்தசாமி அரங்கில் இக் கூட்டத்தை நடத்துவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது."

## வவுனியாவில் கலைவிழா

வவுனியா, வெள்ளி

வவுனியாப் பகுதியைச் சேர்ந்த பிரதேச கலாமன்றத்தினர் அடுத்த மாதம் 26-ம், 27-ம், 28-ம் திகதிகளில் கலைவிழா ஒன்றைநடத்துகிறார்கள்.

நாடகங்கள், கண்டியன் நடனங்கள், பரதநாட்டியம், இன்னிசைக்கச்சேரி ஆகியன கலைவிழாவின்போது இடம்பெறும்.

## றயிலுக்கு பலி

வவுனியா, சனி

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற புகையிரதமொன்று வவுனியாவிலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலுள்ள தாண்டிக் குளத்தில் ஒருவரை மோதியதின் காரணமாக அந்த நபர் இனம் தெரியாத முறையிலேயே ஸ்தலத்திலே மரணமானார். இறந்த நபர் இன்னும் யாரெனக் கண்டுபிடிக்கப்படவில்லை.

## லொறி குடைசாய்ந்தது

வவுனியா, சனி

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு சிமெந்து கொண்டு சென்ற லொறி ஒன்று மூன்றுமுறிப்புச் சந்திக்கருகாமையில் இன்னொரு லொறியை விலத்தும் போது மதகு ஒன்றுடன் மோதி குடைசாய்ந்தது. இந்த லொறியின் சாரதி ஏ. ராசு எனபவரும், இன்னொருவரும் தெய்வாதீனமாக சிறு காயங்களுடன் உயிர்தப்பினர்.

## திருஞானசம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், சனி

திருஞானசம்பந்தர்குருபூசை வயாவிழான் மானம்பராய் பிள்ளையார் கோவிலில் இந்து சமய விருத்திச்சங்க ஆதரவில் நடைபெற்றது, ஆசிரியர் திரு. க. க. சுப்பிரமணியத்தின் தலைமை உரையின்பின் மாணவர்களான க. சுப்பிரமணியம், க. கதிர்காமநாதன், ந. பத்மநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 31-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.